உ

தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி

# பிள்ளைத்தமிழ்



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

1999

# ஸ்ரீ துர்க்காதேவி பிள்ளைத்தமிழ்



ஆக்கியோன் :

**அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**

பிரமாதி ௵ ஆடி ௴

1999

நூல் வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

உரிமை : ஷெ தேவஸ்தானத்திற்கு

அச்சுப்பதிவு : திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்

உ

## நூன்முகம்

# அன்னையின் அருளை அளவிட முடியுமா?

எல்லாம் வல்ல — தெல்லியூர் ஸ்ரீ துர்க்காதேவி சிவவல்லமையாகிய மகாசக்தியாவார். நினைப்பார் நினைக்கும் வடிவில், வேண்டுவார் வேண்டும் வரம் கொடுக்கும் அகிலாண்ட நாயகியாக விற்றிருக்கின்றார். சிறியேன் உள்ளத்தில் ஒளி விளக்காக நின்று என்னை இயக்கி நன்னெறியில் வாழவைத்த தாய் அந்தப் பராசக்திதான். ஒருமுறை ஆலய வாசலிற் போய் நின்றதும் அந்தச் சிமாட்டியின் அழகைக் கண்டேன் உடனே உன்னுருவம் கருங் கல்லல்லவே அம்மா உன் திருநாமம் ஒரு சொல்லல்லவே எனத் தொடங்கும் கீர்த்தனத்தைப் பாடினேன். எனது நாவிலே அட்சரமெழுதி நெற்றியிலே திருநீறு பூசுங் காட்சியும் கண்டேன். உள்ளம் நெகிழ்ந்தேன் — காதலாகிக் கண்ணீர் மல்கினேன். என்னை மறந்தேன்.

என்னை ஆட்கொண்ட தாயே உன்னைப் பாடாமலிருப்பேனோ என்று மனதிலுறுதி கொண்டேன். திருவருட் கவிமாலை என்னும் நூலை 1974இல் பாடினேன். அந்நூல் அமரர் மு. பொன்னுத்துரையவர்கள் வெளியீடு செய்ய அரங்கேற்றம் நடந்தது.

பின்னர், ஸ்ரீ துர்க்கையம்மையைக் குழந்தையாகக் கண்டு பிள்ளைத் தமிழாக இந்நூலை எழுதினேன். இதனை என் பெருமதிப்புக்குரிய தெய்வப் பண்பரசி

கலாநிதி, பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களின் ஆர்வத்தால் வெளியிடும் பாக்கியம் கிடைத்தது இவை எல்லாம் அகில ஜீவரட்சகியாகிய அன்னையின் அருளே. இந்தப் பேரருளை எம் போன்ற புல்லறிவாளரால் அளவிட முடியுமா?

''பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே'' என்பார் அப்பரடிகள். அவ்வாறே, எம்பெருமாட்டியே இந்தப் பிள்ளைத் தமிழையும் பாடினார். சிறியேன் எழுதினேன். இதுவே உண்மை. இப்பாடல்களை அந்தப் பரமேஸ்வரி துர்க்கையம்பிகை திருவடிக்கே சமர்ப்பணம் செய்கிறேன். இந்நூலை வெளியீடு செய்யும், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களைத் தலைமையாகக் கொண்ட துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலன சபையாருக்கும், இந்நூலுக்கு அருளாசி வழங்கிய யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாம் குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளுக்கும், வாழ்த்துரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி கூறி எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன். மிக மிகச் சிறப்பாக அச்சிட்டுதவிய திருமகள் அழுத்தகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றி கூறுகிறேன். இந்நூலை உணர்ந்து ஓதுவார் எம்பெருமாட்டியின் திருவருள் பெற்றுச் சகல சுகமும் அடைவார்களாக என வாழ்த்தி வணங்குகிறேன்.

சர்வமும் சக்தி மயம்

நகேஸ்வரம், அன்பன்

அளவெட்டி. **அருட்கவி சீ. விநாசித்தம்பி**

01 - 07 - 1999

# அருளாசிச் செய்தி

***அன்புசார் பெருந்தகையீர்!***

*அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் மேல் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல் வெளிவருவதை இட்டு மன மகிழ்ச்சி அடைகிறோம். கல்வி ஆளுமையும் இறை தொண்டிலும் தன்னை ஈடுபடுத்தி தொண்டு செய்து வரும் விநாசித்தம்பி அவர்கள்; சமூகத்திற்கும், சம யத்திற்கும் வேண்டிய தொண்டுகளை ஆற்றி வரும் விநாசித்தம்பி அவர்கள்; இயற்கையாகவே கவி பாடும் ஆற்றல் உள்ளவர். பல ஆலயங்களுக்கு பிள்ளைத்தமிழும், திருஊஞ்சலும் தோத்திர பாடல் களும் பாடி அருளி உள்ளார். தெல்லிப்பழையில் எழுந்தருளி இருக்கும் துர்க்கை அம்மனை பிள்ளை யாக நினைத்து பிள்ளைத்தமிழ் பாடியமை அம்பி கையின் அருளை மேலும் பெறுவதாக அமைகிறது. காவல் தெய்வமாக இருக்கும் துர்க்கை, மனிதர்களுக்கு வேண்டிய வீரத்தையும் பெற்று மகிழ்வாக வாழ பாடல் ஒவ்வொன்றும் அடிகளாக அமைகிறது பிள் ளைத்தமிழில் உள்ள கட்டுக் கோப்பில் அமைகிறது. எல்லோர்க்கும் மகிழ்வை தருகின்றது. பிள்ளைத்தமிழ் பாடிய அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் பல் லாண்டு காலம் வாழ்ந்து சமூக தொண்டாற்ற வாழ்த்து கிறோம். இந் நூலைப் பெற்று அனைவரும் அம்பி கையின் திருவருளுக்கு பாத்திரமாக பிரார்த்திக் கிறோம்.*

*''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*
*இரண்டாம் குருமஹா சந்நிதானம்*

***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்***

*27-07-1999 நல்லை ஆதீனம்*

உ

# தெல்லியூர் துர்க்கை அம்பாள் பிள்ளைத்தமிழ்

# வாழ்த்துரை

அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் அவர்களின் திருவுள்ளத்திலிருந்து ஊறி வருகின்ற அருள் ஊற்றுக்கள் எங்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் வளாகத்தை என்றும் நினைத்துக் கொண்டே இருப்பன. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அருட் பாடல்களை அன்னை துர்க்காதேவியின் மேல் அள்ளி அள்ளிச் சொரிபவர் அருட்கவி ஐயா அவர்கள். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல இன்று வெளிவருகிறது ''துர்க்காதேவி பிள்ளைத்தமிழ் பிரபந்தம்'' ஆகும். இதனை சில ஆண்டுகளுக்கு முன்பு பாடி நிறைவு செய்த அருட்கவி அவர்கள் அச்சுப்பதிவு செய்து நூலாக்க வேண்டும் என்று விரும்பினார். இதற்குரிய காலம் கனிந்தவுடன் இன்று துர்க்கை அம்பாள் அடியவர்களின் கரங்களில் இந்நூல் தவழ்கிறது.

மனித வாழ்க்கை என்ற வீணையை மீட்டி அதைப் பேரின்பத்தோடு சுருதி சேர்க்க விரும்பினால் அதைத் தாயின் கையில் தான் ஒப்படைக்க வேண்டும். நமது இதயத்தை முற்றாக அப் பரதேவதையிடம் ஒப்படைக்க வேண்டும். இதில் பூரண சரணாகதி தர்மம் இடம் பெற வேண்டும் அப்பொழுதுதான் எம் பெருமாட்டி எங்கள் இதயத்திலிருந்து பேசத் தொடங்குவாள். நாங்கள் ஒரு அடி வைத்து அன்னையை நோக்கிச் செல்ல அந்தத் தாய் ஒன்பது அடி வைத்து எம்மை நோக்கி வருவாள்.

தேவியின் கையில் இருக்கும் களிமண் உருண்டைகளாக நாங்கள் மாற வேண்டும். எப்படிப் பிசைந்தாலும், உருட்டினாலும் வடிவம் தந்தாலும் எல்லாம் அன்னையின் பொறுப்பாகவே அமையும். எனவே அம்பிகையின் அருளைப் பெற்று அதனை உலகத்துக்கும் பாய்ச்சி மனித இனத்தை தேவ இனமாக மாற்றுகின்ற சக்தி அம்பாளுக்குத் தான் உண்டு. இதனை அனுபவத்தில் பெற்றவர் அருட்கவி அவர்கள்.

இத்தகைய அனுபவத்தால் பாடப் பெற்றதே இப் பிள்ளைத்தமிழ் பிரபந்தமாகும்.

''தொழுவார்க் கிரங்கிவந் தருள்பொழியும் சிவசக்தி
தொல் தெல்லிப் பதியில் மேவும்
துர்க்கைநா யகிபேரிற் பாடும்பிள் ளைத்தமிழ்
சுவை தந்து பரிமளிக்க
எழுவாதை தீர்க்குமொரு கலையேணி யாய்த்திகழ்ந்
தெல்லார்க்கு மின்ப முதவ
இணையடித் தாமரையென் இதயத்தி லேபதித்
இனிதுகாத் தருள் புரிகவே''

என்று காப்புப் பாடி இறையருளை யாசித்து நிற்கிறார். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் அதிகாலையில் ஒலிக்கும் திருப்பள்ளி எழுச்சிப் பாடல் அருட்கவி அவர்களால் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பட்டது அத்துடன அம்பாளுக்குத் திருவூஞ்சலும் மேலும் பல திருப்பதிகங்களும் காலத்துக்குக்காலம் பாடி வெளியிட்ட பெருமை இவருக்குண்டு. இவற்றில் துர்க்காதேவி திருவந்தாதியும் சிறப்பு இடம் பெறுகிறது. இவற்றுக்கெல்லாம் மணிமகுடம் வைத்தாற் போல் இன்று வெளியிடப்படும் துர்க்காதேவி பிள்ளைத்தமிழ் விளங்குகின்றது. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், அம்மானைப் பருவம்,

புது நீராட்டுப் பருவம், பொன்னூஞ்சற் பருவம் என்ற ஒழுங்கில் பிள்ளைத்தமிழ் பிரபந்தம் அமைகின்றது. அத்துடன் அநுபந்தமாக ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு பாடல்களாக முன்னமே வெளியிட்ட பாடல்களை இணைத்து இந்நூலில் இடம்பெறச் செய்துள்ளார். துர்க்கை அம்பாள் இடத்திலே ஈடுபாட்டையும் நிறைந்த பக்தியையும் வளர்ப்பதற்கு இந் நூல் பெரிதும் வழிகாட்டுகிறது.

''பாடி ஆடி நைந்து உருகி
நெக்கு நெக்கு ஆடவேண்டும். நான் போற்றி''

என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடி அருளுகின்றார். இத்தகைய பக்தி வைராக்கிய நிலை துர்க்கை அம்பாள் இடத்திலே ஏற்படுவதற்கு மிகவும் சாதனமாக அருட்கவி ஐயா அவர்களின் இப் பாடல்கள் அமைந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். அம்பாள் அடியார்கள் எல்லோரும் தங்கள் கரங்களிலும் மனங்களிலும் இப் பாடல்களைத் தவழவிட்டு பக்தி வாழ்வு வாழ வேண்டும் என்று பணிவாக வேண்டுகிறேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**
**28-07-1999**

## அணிந்துரை

அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா அவர்கள் எழுதிய தெல்லியூர் துர்க்காதேவி பிள்ளைத்தமிழ் நூலுக்கு அணிந்துரை எழுதும் பெரும்பேறு எமக்குக் கிடைத்துள்ளது. பொன்னின் குடத்துக்குப் பொட்டிடுவது போன்ற பணியினைச் செய்வதும் ஒருவகையில் மகிழ்ச்சியைக் கொடுப்பதொன்றாகும்.

1974ஆம் ஆண்டிலே அருட்கவி அவர்கள் 10 பாடல்கள் கொண்ட ஒரு பிள்ளைத்தமிழ் பாடினார். காப்புப் பருவம், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப்பருவம், வாரானைப்பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப்பருவம், சிற்றிற்பருவம், சிறுதேர்ப் பருவம் என்னும் பத்துப் பருவங்களுக்கும் முறையே ஒவ்வொரு பாடலாகப் பத்துப் பாடல்களுடைய தெல்லியூர் துர்க்காதேவி பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இப் பத்துப் பாடல்களும் அனுபந்தமாக இந்நூலிலே தரப் பட்டுள்ளன.

இப்பொழுது நூலாக வரும் பிள்ளைத்தமிழ் நூலிலே பத்துப் பருவங்கள் இடம்பெற்றுள்ளன. இறுதி மூன்று பருவங்களும் மாற்றம் பெற்றுள்ளன. அவை அம்மானைப் பருவம், புதுநீராட்டுப்பருவம், பொன்னூஞ்சற் பருவம் என்பனவாகும் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குச சிறப்பாக உரிய இம்மூன்று பருவங்களையும் இந் நூலிலே அருட்கவிஞர் சேர்த்துள்ளார். தமிழ் இலக்கியம் அறிந்த முதற் பிள்ளைத்தமிழைப் பெரியாழ்வாரே பாடினார். ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் பாவனை செய்து பெரியாழ்வார் அருமையான பாசுரங்களைப் பாடினார். பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கிய வடிவமாக **குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்** சோழப்பெருமன்னர் காலத்திலே ஒட்டக் கூத்தரால் பாடப்பட்டது. முதன்முதலாகப் பாடப்பட்ட

பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் குமாரகுருபர சுவாமிகளாலே பாடப்பெற்ற **மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்** ஆகும். இந்த வரிசையிலே அருட்கவி அவர்கள் பாடிய **தெல்லியூர் துர்க்காதேவி பிள்ளைத் தமிழ்** அமைகின்றது

தெல்லியூர் துர்க்காதேவி உலகப்புகழ் பெற்றவள். அத்தகு தேவியைக் குழந்தையாக்கிப் பார்க்கிறார் அருட் கவிஞர். காப்புப் பருவத்திலே விநாயகர் தொடக்கம் வைரவக் கடவுள் ஈறாகப் பன்னிரண்டு கடவுளர்களை இப்பிள்ளைத்தமிழ் பாடத்துணைக்கு அழைக்கின்றார். நாராயணனைத் துணைக்கு அழைக்கும்போது கவிஞ ருடைய பக்தியுணர்வும் அதைப் புலப்படுத்தும் சொற் கோவைகளும் சிறப்புற வெளிப்படுகின்றன.
''செங்கமலக் கண்ணனே நீலவான் வண்ணனே... ''
என்று கண்ணனைக் காப்பாக அழைக்கும் வேளையில் அம்பாளுடைய அருட் கோலத்தினை அருமையாகப் படைக்கின்றார்.

''........ புன்முறுவ லுடனெங்கள்
புந்தியிலிருக்கும் தேவி
தங்குகைச் சூலமழு தாங்கிடு மலங்காரி
தண்தெல்லித் துர்க்கை யம்மை''

என்று கவிஞர் பாடுகின்றார்.

சங்கத்தமிழ் உலாவும் சந்தன வீதியுடையதாகப் புலவர் துர்க்காபுரத்தைக் குறிப்பிடுகிறார். முருகனைப் பொன்மடியிலே கிடத்தி அவன் புதுமொழி கேட்ட அம் பாளை,

''சங்கத் தமிழின் முதுதலைவி
தமியேற் கிரங்காய் தாலேலோ
சந்தன வீதித் துர்க்கைபுரச்
சாந்தினி தாலோ தாலேலோ.''

என்று வர்ணிக்கின்றார். ''சைவமுயர் தெல்லிநகர்த் துர்க்காபுரத்திறைவி'' என்று சப்பாணிப் பருவத்திலே கூறுகிறார். தெல்லிநகர்த் துர்க்காபுரத்தை

''தவமுயரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி''
''சாந்திதரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி''
''தமிழ்வளரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி''
''தலமோங்கு தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி''

என்றெல்லாம் புலவர் பாடுகின்றார். அங்குள்ள மடங்கள் பற்றி

''அலங்காரக் கோயில்மடம்
ஆயகலை அரங்குமடம்
அன்னமடம் அநாதைமடம்
அடியார்கள் கூடும்மடம்
கலங்காமல் வாழ்வதற்குக்
கன்னியரின் தொண்டுமடம்
கல்யாண மடங்களிவை
காட்சிதரு நெடுங்கோயில்''

என்று அம்புலிப்பருவத்திலே கூறப்படுகின்றது.

துர்க்காதேவியினுடைய தீர்த்தப்பொய்கை புஷ்கரணி என அழைக்கப்படுவது. புதுநீராட்டுப் பருவத்திலே பல பொய்கைகளுடன் அம்பாளுடைய புஷ்கரணியையும் சேர்த்துப் புலவர் பாடுகின்றார்.

''சங்கம் வளர்த்த மதுரையிலே
தமிழ்ப்பொற் றாமரை ஒருபொய்கை
செங்கை வேலோன் வந்துதிக்க
சிறப்பு மிகுசர வணப்பொய்கை
தங்கும் தெல்லிப் பழையினிலே
தந்தாய் நின்னருள் மலர்ப்பொய்கை
பொங்கும் துர்க்கா புஷ்கரணிப்
புதுநீர் ஆடி அருளுகவே''

துர்க்காதேவி புதுநீர் ஆடும் பொய்கை பொற்றாமரைப் பொய்கை, சரவணப்பொய்கை ஆகியனவற்றை ஒத்ததாக உள்ளமைபற்றியே புலவர் பாடுகிறார்.

பிள்ளைத்தமிழ்ப் புலவருடைய பரநல வேண்டுதல்கள் பலவாயுள்ளன. ''வான்முகில் வழாது பெய்க...'' என்னும் வேண்டுதலைப் போல,

''நின்னடியார் வாழையடி வாழையாக
நீடூழி திருத்தொண்டு நிகழ்த்தச் சைவ
நன்னெறிகள் வழாதுலகம் சிறக்க வேந்தர்
நவையறுசெங் கோல்செழிக்க வாய்மைநீதி
துன்னியசெந் தமிழ்இதிகா சம்புராணம்
தொடர்சால்பு நிலைநிற்க அடியோம்நின்தாள்
சென்னிவைக்க அருள்பொழியும் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே''

என்று பொன்னூஞ்சற் பருவத்திலே அருட்கவி பாடுகின்றார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களுடைய கவித்திறனையும், பக்தியுணர்வினையும், செந்தமிழ்த் திறனையும் புலப்படுத்துவனவாக இப்பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் அமைகின்றன. சின்னஞ்சிறு பிள்ளையாக அம்பாள் துர்க்காபுரத்தை வலம்வரவைத்துள்ளார் கவிஞர். அடியார்கள் இப்பாடல்களைப் பொருளுணர்ந்து படித்தால் இந்தச் ''சின்னஞ்சிறு பெண்ணை'' துர்க்காபுரத்திலே ஒவ்வொரு நாளும் தரிசிக்கலாம்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
முதுநிலைத் தமிழ்ப்பேராசிரியர்
உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

27-07-1999

உ

# வேண்டுதல்

அழகியே போற்றி சிங்கத் தமர்மகா சக்தி போற்றி
மழவிடை யோனின் பாகம் வதிந்திடும் மாதா போற்றி
பழவினை போக்கி ஞானப் பதமலர் தருவாய் போற்றி
உழுகொடைப் பதியில் மேவும் ஓம் துர்க்கைத் தாயே போற்றி

பற்பல பழிசெய்தாலும் பரிவுடன் கண்ணால் நோக்கி
நற்பலன் நல்கி மெய்ம்மை ஞானவாழ் வருளும் செல்வக்
கற்பகக் கையினாளே கடையனேன் நெஞ்சிலென்றும்
சிற்பர சோதியாகத் திகழுவாய் துர்க்கை அம்மா

உலகுயர் சராசரங்கள் ஓம்துர்க்கா தேவி என்று
புலனெலாம் ஒடுங்கி வேண்டப் பொன்கலை அறிவு மக்கள்
நலமனை சுகங்களெல்லாம் நல்குவாய் தமிழ்படைத்த
குலமயர் வின்றிவாழக் குளிர்வரம் கொடுப்பாயம்மா

பொன்னொளி முகமும் அன்புப் புன்னகை வாயும் காதில்
மின்னிடு தோடும் சோதி வீசுசெஞ் சடையும் பாதத்
தின்னிசைச் சிலம்பும் அஞ்சேல் என்றிடும் கரமும் காட்டி
என்னித யத்தில்நிற்பாய் இறைவியே துர்க்கைத் தாயே

கொடுமைக ளணுகா வாழ்வு கொடுத்திடும் துர்க்கா போற்றி
அடியவர் உறவில் கூட்டும் அருட்சக்தி துர்க்கா போற்றி
மிடிபிணி வஞ்சம்நீக்கும் விமலியே துர்க்கா போற்றி
படிபுகழ் தெல்லியூர்வாழ் பராபரி துர்க்கா போற்றி.

உ

# சமர்ப்பணம்

வல்வினை நோய் தீர்ப்பதற்கு
வண்டமிழ்ப்பா மாலைகட்டிச்
சொல்வளரும் நின்கழற்கே
சூட்டுகின்றேன் காத்தருள்வாய்
செல்வி தங்கம் மாமுதலாம்
சீரடியார் தொண்டு செய்ய
நல்விளக்காய்ச் சோதிதரும்
ஞானதுர்க்கா நாயகியே

— ★ —

பிள்ளைத் தமிழ் பாடப்
பேதையேன் கன்மலைநேர்
உள்ளத்தில் நின்கருணை
ஊற்றளித்தாய் — வள்ளற்கைத்
தாயேஇந் நூலைச்
சமர்ப்பணித்தேன் உன்னடிக்கே
ஓயா துணை வைப்பாய் ஓம்

— ★ —

கற்றறியேன் நெஞ்சிற்
கழல்காட்டிக் கண்காட்டி
நற்றமிழின் கோலமாம் நாவேறிப் — பற்றுகவித்
தேன்மாலை பாடென்று தெல்லியூர்த் துர்க்கைத்தாய்
வான்மாரிக் கைதந்தாள் வந்து

— ★ —

அம்மா எனவழைக்க
அன்பு முகம் நோக்கியதால்
இம்மா நிலத்தில் இயங்குகின்றேன் — வெம்மாயை
தீர்ப்பாள் திருவருளால்
செப்பியவிந் நூலையுகந்
தேற்பார் அருளாளர் ஈண்டு

— ★ —

சீராரும் துர்க்கையம்மைத்
தெய்வீகம் பூத்துவரும்
தாராரும் பிள்ளைத் தமிழ்படிப்போர் — பாராரும்
இன்பம் பெறுவார் இசைந்தசுக வாழ்வுறுவார்
அன்புநெறி காண்பார் அறிந்து.

அருட்கவி சீ. வி.

உ

## காப்புப்பருவம்

### ஸ்ரீ விநாயகர்

சீர்வளரும் வேதாக மங்களெல் லாம்சிவணித்
தேங்குதிரு முறைவிளங்கத்
திருநாரை யூருறையும் பொள்ளாத பிள்ளையே
சித்திபுத் திக்கதிபனே
தார்வளரும் தூர்வையொடு வன்னிமந் தாரைமலர்
தாங்கியருள் லம்போதரா
தலைமேரு வெற்பிலே நிலையான மெய்ப்பொருள்
தந்தவெழுத் தாணி கொண்டு
பேர்வளரும் முறையெழுதிப் பிரபஞ்ச முய்வித்த
பித்தனின் முத்தமகனே
பேசுதமிழ் ஔவைக்குப் பேறருள் கணேசனே
பிரணவ மகாதேவனே
ஊர்வளரும் கோபுரம ணிக்கோயில் உறைதெல்லி
உமைதுர்க்கைப் பிள்ளைத்தமிழ்க்
குதயசூ ரியனாக நின்றுகாத் தருள்பொழிக
ஓம்விநா யகமூர்த்தியே.

### சிவபெருமான்

அப்ப னேதில்லை அம்பலத் தாடிடும்
ஆதி யேநட ராசத யாபரா
அரிய ஐந்தெழுத் தாயம கேஸ்வரா
அவர வர்மனக் காட்சி நயந்திடும்
ஒப்பி லாமணி யேஅரி பங்கயன்
ஓடித் தேடியும் ஓர்முடி வின்றியே
ஒடுங்கி நின்றவர்க் குதவுமி லிங்கமே
உரக மும்புலி முனிவனும் நித்தியம்
செப்பும் பாடலுக் காடும்ந டேசனே
செந்த மிழ்மொழி இலக்கணம் பேசிய
தேவ னேசிவ காமிம ணாளனே

சிற்ப ரானந்த ஞானசொ ரூபனே
இப்பு விச்சிர மானதுர்க் காபுரம்
இருக்கு மம்பிகை எம்பெரு மாட்டியின்
இனித்தி டும்பிள்ளைத்தமிழ்க்கவி நலம்பெற
எருதி லேறிவந் திருந்தருள் புரிகவே

## ஸ்ரீ நகுலேஸ்வரர்

கீரிமுனி ஜமதக்னி, சித்திராங் கதன், சனியின்
கேடெலாந் தாங்கிய நளன்,
பாரதப் புகழ்மிக்க அர்ச்சுனன் குதிரைமுகம்
பற்றுமாருத வல்லியாள்
நீரதிக கண்டகியில் நீராடி நீறாடி
நினைவேண்டக்கருணை செய்தாய்
பேரதிக நகுலகிரி வாசனே மாவைவேற்
பிள்ளையைத் தருதந்தையே,
பாரதிக தொண்டர்களும் அடியாரும் தேவர்களும்
பகலிரவு வந்து வந்து
தாரதிக திருவடியை நறைகொண்ட மலர்தூவித்
தம்மகத்தே பதித்துச்
சீரதிக துதிபாடச் சிறுசிரிப் பொடுதோன்றித்
திருவருள் செய்யும் அழகி
தேரதிக திருவீதித் தெல்லியூர்த் துர்க்கையின்
தேன்பிள்ளைத் தமிழ்க்கருள்கவே

## ஸ்ரீ மனோன்மணி

எழுதாத மந்திர சொரூபியே சிவலிங்கத்
திலங்கும் மகாசோதியே
எண்ணுவார் இருவினைக் கணக்கறிந் தேற்றவிதம்
இன்பதுன் பங்களுதவி
வழுவாத பேரின்ப வாழ்வுதரும் மன்னையே
வாக்குமனங் கடந்த பொருளே
மறைமுடிக் கெட்டாத இறைவியே சதாசிவ
மனோன்மணி உமாதேவியே
தொழுவார்க் கிரங்கிவந் தருள்பொழியும் சிவசக்தி

தொல்தெல்லிப் பதியில் மேவும்
துர்க்கைநா யகிபேரிற் பாடும்பிள் ளைத்தமிழ்
சுவைதந்து பரிமளிக்க,
எழுவாதை தீர்க்குமொரு கலையேணி யாய்த்திகழ்ந்
தெல்வார்க்கு மின்பமுதவ,
இணையடித் தாமரையென் இதயத்தி லேபதித்
தினிதுகாத் தருள்புரிகவே.

## திருமால்

செங்கமலக் கண்ணனே நீலவான் வண்ணனே
திகிரிசங் கேந்துகரனே
தீந்தமிழ்ப் புலவன்பின் சென்றவா, தூணிலே
சிங்கமாய் எதிர் நின்றவா,
பங்குதிரு மகளுடன் பார்மகளை வைத்தெங்கும்
பரி பூர்ணனாய் நின்றவா
பாரதப் போரிலே நீதிவளர் பஞ்சவர்
பங்காள னானகிருஷ்ணா
பொங்குமழை தாக்காமல் போற்றுமடி யர்க்காகப்
பொருப்பேந்தும் வாமதேவா
பொல்லாத வினைதீர்த்துப் புன்முறுவ லுடனெங்கள்
புந்தியிலிருக்கும் தேவி
தங்குகைச் சூலமழு தாங்கிடு மலங்காரி
தண்தெல்லித் துர்க்கை யம்மை
சரணமலர் புகழ்பிள்ளைத் தமிழடியர் உளமிளிரத்
தருகதுணை யடிஞானமே.

## திருமகள்

அலைமகளே செங்கமலத் தமரும்தாயே
அரங்கேசன் மார்பமர்ந்து வேண்டும் தொண்டர்
நிலைபெறுமா நிதியருளும் திருவே ஞாலம்
நிலவளமும் நீர்வளமும் தொழிலும் சீரும்
கலைவளமும் சந்தான வளமும் ஓங்க
கண்ணருள்செய் கற்பகமே தெல்லி யூரில்
சிலைமிளிர்கைத் துர்க்கைதிருப் புகழ் சுரக்கும்
சிவப்பிள்ளைத் தமிழ்சிறக்கத் துணை செய்வாயே

## ஸ்ரீ முருகன்

அருளழகா வேல்பிடித்த குமரா செந்தூர்
அமர்ந்தபசு பதி மகனே அமரர் வேண்ட
மருளுருவ நிருதர்குல மழித்த கந்தா
வனமகளும் கஜமகளும் மருவும் நாதா
பொருளதிக தமிழ்வளர்த்த புலவா, துர்க்கா
புரமுறைநின் தாய்பிள்ளைத் தமிழு ரைக்க
★ உருளலர்ந் துளமாலைதொடும்பொற் பாதம்
உள்ளத்தில் வைத்துக்காத் தருளுவாயே.

## கலைவாணி

என்னிருள் இதயத்துள்ளே இருந்தெழு பானுபோலப்
பொன்னருட் சோதிகாட்டிப் புண்ணிய கவிதையாக்கும்
அன்னையே வாணித்தாயே அறிவிலா அடியே னுன்னை
முன்னிலைப் பொருளாய்க் கொண்டேன் முளரித் தாளருளுவாயே

அருளுதி கமலமுத்தே, அணிதரு தெல்லியூரில்
கருணைநாயகியாய்மேவும்கௌரியாம்துர்க்கையம்மை
திருவடிப் புகழ் நலங்கள் திகழ்பிள்ளைத் தமிழியம்ப
மருமலர்ப் பாத ஞானம் வழங்குவாய் காப்பதாமே

## ஸ்ரீ பிரம்மதேவர்

அம்புய மீதிருக்கும் அயனேநால் வேதநாதா
பம்பிய பிறவியாத்துப் பண்ணிய பயனைநல்கும்
எம்பெரு மானே துர்க்கை ஈஸ்வரி தமிழ் முழங்கக்
கும்பிடு கின்றேன் நின்றன் குரைகழல் துணைக்கொண்டேனே

## ஸ்ரீ முத்துமாரி

கம்பத்தி லேறிநின்று கரகத்தில் நடனமாடும்
செம்பதுமப் பொன்மேனி சிற்பர மாரியம்மா
நம்பினர்க் கினியதெல்லி நாயகி துர்க்கா கீர்த்தி
வம்பலர் பிள்ளைப்பாடல் மலர்ந்திடக் காப்பாய் தாயே

* இந்துளம் – கடம்பு

## அரிஹர புத்திரர்

சிங்கத்தி லேறிவரும் சிவசக்தி அபிராமி
திரிபுராந் தகிகுமாரி
திருவாலங் காட்டிலே பெருநடம் செய்தவள்
செய்தவச் சுநந்த முனியும்
செங்கரக் கார்க்கோட கனும்காணச் சிவனோடு
திருக்காட்சி தந்தவிமலி
தெல்லியூர்த் துர்க்கையவள் நல்லபிள் ளைத்தமிழ்
சீர்பொலியக் காத்தருள்கவே
தங்குமுனி வோரெலாம் தம்மைமறந் தலையவரும்
சரசமோ கினியாகிய
சாரங்கபாணியும் பிச்சையேற் றிட்டுவரும்
சங்கரனும் பெற்றமகனே
அங்கைகள் குவித்திந்தி ராணியழைத் திடுதருணம்
அருளுதவு தருமவடிவே
ஐயப்பநாதனே பூரணைபுட் கலைகணவ
னாகிவரு ஞானகுருவே.

## வைரவக் கடவுள்

எண்ணுவார் எண்ணுமிடம் எங்கணும் வந்திடும்
ஈசனே ஆதி முதலே
எண்டிசை குலுங்கமணி தண்டைகிண் கிணிகள் ஒலி
இசைதரச் சடைபரப்பி
திண்ணிய நடம்புரியும் தீரனே செங்கையில்
திரிசூலம் பரசுடுக்குச்
சீரான பாசமிவை தாங்கிவரும் தேவனே
சிறியேனை இளமை முதலாய்ப்
பண்ணிசைக் கவிபாடத் தண்ணருள் புரிந்துமிடி
பற்றாது காத்த செல்வா,
பயின்றிடும் பலிவேள்வித் தலைவனே மாகாளி
பங்கனாய் வரும்பரமனே
புண்ணியம் புரிதெல்லித் துர்க்கேஸ் வரிக்கினிமை
பொலிபிள்ளைத் தமிழிசைக்க
பொன்னான நின்னடிகள் என்னாவும் நெஞ்சகமும
பொருந்தநின் றருளுவாயே.

# செங்கீரைப்பருவம்

பொன்னசல மின்னுமொளி பொங்கிடும் திருமேனி
புவனமெல்லாம் விளங்க
புரிசடை பரப்பிஅருள் பொழிமுறுவ லோடுமீன்
புரைவிழி நயந்து கையில்
மன்னுதிரி சூலமழு கலசபா சங்கொண்டு
வல்லரி யமர்ந்து பாத
மணியிசை புலம்பவரு மன்னையே கைலாச
மலைமேவு நிகம கிளியே
உன்னுமடி யார் நெஞ்சில் ஒளிர்கின்ற சோதியே
உண்மையறி வானந்தமே
உருவாகி அருவாகி உருவருவ மாய்நிற்கும்
ஓங்காரத் துட்கொழுந்தே
சின்னமுதற் பல்லியம் ஒலி தெல்லித் துர்க்கையே
செங்கீரை யாடியருளே
தீராத வினைதீர்க்கும் அமிர்தசஞ் சீவியே
செங்கீரை யாடியருளே.

காசியி லிருந்துவரும் சொப்பனேஸ்வரிப்பீடக்
கன்னியாய்ச் சிலம்பன்னையாய்க்
கருதுமடி யானுக்குக் கனவிலே வாக்கருளிக்
கனிவேம் பிருப்பை யழிஞ்சில்
வீசுநிழ லுழுகொடைப் பகுதியுயர் மேட்டிலே
மிளிர்திருக் கோயில் கொண்டு
வேண்டுவார் வேண்டுவரம் 'இன்னேதந் தனம்' என்று
மெய்யர்க்கு மெய்ம்மைகாட்டிப்
பேசியும் பாடியும் பிரியாத சிந்தையரைப்
பிரியாத கருணைத் தாயே
பேயாண்டி துணைவியே மாயாண்டி தங்கையே
பெருவயிற் றனின் னையே
தேசமெங் கணும்போற்றும் தெல்லிநகர்த் துர்க்கையே
செங்கீரை யாடியருளே
தீராத வினைதீர்க்கும் அமிர்த சஞ்சீவியே
செங்கீரை யாடியருளே.

காந்திமலி வதனமதிபொழிமழைக் கருணையால்
கண்ணகல் ஞாலமுய்யக்
கனகசபை நாதனுட னனவரத மாடிடும்
கௌரியே சிவகாமியே
நீந்தரிய பவக்கடலில் நின்றுழலும் வினைதணிய
நெறிபூத்த சிவநீதியை
நினக்கினிய தேவர்கள் முனிவர்கள் மூலமாய்
நினைந்தெமக் குதவுமுமையே
பாந்தளணி சூடுவான் பாதிக்குவாதிட்டுப்
பகரரிய நோன்பு பேணிப்
பாலூட்டும் தாய்மருந் துண்பதெனும் வண்ணமாய்ப்
பரிவுமிகு தவமிருந்தாய்
தீந்தமிழ்க் கலைவளரும் தெல்லிநகர்த் துர்க்கையே
செங்கீரை யாடியருளே
தீராத வினைதீர்க்கும் அமிர்த சஞ்சீவியே
செங்கீரையாடி யருளே.

சந்தான சௌபாக்ய சகலசுக முந்தரும்
தற்பர பராசத்தியே
சரியையும் கிரியையும் யோகமும் ஞானமும்
தனித்தனி பிடித்துயர்ந்து
சிந்தா குலம் போக்கும் போக்கினை யுணர்த்திடும்
சிரமலர் செழித்த தேனே
சித்துசத் தானந்த வெள்ளமே வெள்ளத்தில்
தெரிகின்ற சோதிமலரே
அந்தாதி யில்லாத ஐயனின் வாக்கறிந்
தாயபடி யளக்கும் தாயே
ஆருயி ரனைத்துக்கும் உயிராகி அறிவாகி
அகலாத ஓரன்னையே
செந்தாம ரைச்சுனைத் தெல்லிநகர்த் துர்க்கையே
செங்கீரையாடியருளே
தீராத வினைதீர்க்கும் அமிர்த சஞ்சீவியே
செங்கீரையாடி யருளே.

வித்துக்கு வித்தாகி விளைவுக்கு விளைவாகி
விதம்விதம் விளங்கிநின்ற
விண்ணாதி உலகங்கள் எல்லாமழிந் தூழி
வெள்ளத்தில் ஒரு தோணியாய்
வித்தகம் தலைநின்ற வேணுபுர நாயகனை
விதிவந்து வேண்டிநிற்ப
விடையவனின் திருவுளப் படியருட் பெண்ணாகி
விரவுமைந் தொழிலியக்கும்
சத்திஉமை பார்வதி பவானி மாகேஸ்வரி
தரும்பெரிய நாயகியெனச்
சைவம் தழைக்கஇவ் வையம் சிறக்கவரும்
சல்லாப நடனமயிலே
சித்திரக் கலைவண்ணத் தெல்லிநகர்த் துர்க்கையே
செங்கீரை யாடியருளே
தீராத வினைதீர்க்கும் அமிர்தசஞ்சீவியே
செங்கீரையாடி யருளே.

தாய்தந்தை துணையில்லை தாரமுந் துணையில்லை
சகோதரர் துணையுமில்லை
தனையரும் துணையில்லை நண்பரும் துணையில்லை
சகல செசுசும் படைத்த
பாய்துணை இல்லைமனை மாடங்கள் துணையில்லை
பணவைப்பு களும்துணையிலை
பட்டங்கள் பதவிகொண் டெட்டுத்திக் கும்போற்றும்
பாராட்டும் வருந்துணையிலை
வாய்துணையென் றுனது நாமங்கள் தினமோதி
வாட்டுமு வாசைவிட்டுன்
மலரடி பிடித்தவர்க் ககலாது துணைநிற்கும்
மயிலைக்கற் பகவல்லியே
தேய்பிறையை வளர்பிறையென் றுச்சியணி வான்துணைவி
செங்கீரை யாடியருளே
சிந்தனைக் கோபுரத் துர்க்கா புரத்தரசி
செங்கீரை யாடியருளே.

மெல்லவந் துன்கணவன் விழிகளைக் கைம்மலர்
விரலிதழ் கொடு மறைத்து
விளையாடல் செய்தபழி விலக, அவன் சொன்னபடி
விரைந்துகம் பைக் கரையிலே
சொல்லரிய தவமாற்றிச் சூழ்ந்து நீர் தாக்காமல்
தொழுலிங்கம் தனையணைத்துத்
துலங்குவளைக் கரத்தழும்பும் சுரக்குமிரு முலைத்தழும்பும்
சூட்டி வாங்கிய நெல்லினைத்
தொல்லுயிர்கள் வாடாமல் மலமூன்றும் மூடாமல்
தோத்திரப் பலன்கெடாமல்
சுவைக்கக் கொடுத்துநான் கெட்டறங் கள்பூத்த
சோதிகா மாட்சியம்மா
தில்லையரங் கத்திலே மெல்லஅசைந் தாடுவாள்
செங்கீரை யாடியருளே
திருமகளின் மழைபொழியும் துர்க்கா புரத்தரசி
செங்கீரை யாடியருளே.

அம்மையப் பாவெனநின் றழுதழுது கோபுரத்தை
அண்ணாந்து பார்த்த தருணம்
அழகுவிடை யேறிவந் தையன்திரு வாய்மலர
அபர பர ஞானமுலைப்பால்
இம்மையே உண்ணுனென் றெடுத்தூட்டி யாண்டுகொண்
டிறவாத இன்ப அமுதாய்
இருக்குமுத னான்மறைகள் ஆகமத் துறைநெறிகள்
இணைந்ததிரு முறை மூலமாய்ச்
செம்மைமிகு தோடுடைய செவியனெனப் பாடிடத்
திருவருள் புரிந்தசிவையே
சென்மங்க ளெத்தனைஎ டுத்தாலும் எனது மனச்
சிலையிலுனை மறவாவரம்
சிம்மமிசை யேறிவந் தருளுவாய் சிவராணி
செங்கீரை யாடியருளே
தேவகுலம் பணிபுரியும் துர்க்கா புரத்தரசி
செங்கீரை யாடியருளே.

சாற்றிடும் தாவரமும் சங்கமமும் இறைநீதி
தவறாத ஐம்பூதமும்
சலனஒன் பான்கோளும் மூவொன்பான் நாள்களும்
சர்வமண்டலத் தொகைகளும்
ஏற்றவிதி வழுவாமல் இருந்தமலை இருந்தபடி
இயக்கும் மகாதேவியே
எள்ளினுக் கெண்ணெயாய் எம்முயிர்க் குயிராகி
இருக்குமுனை யாமறிவமோ
தோற்றமிகு கணக்கெழுதும் சித்திரபுத் திரனென்ற
சுதனையுத வியமங்கையே
சுகதுக்க சக்கரம் சுழற்றிச் சுழற்றாத
சுகஞான விருந்துதவுவாய்
சீற்றமிகு மசுரர்குலக் கூற்றென உதித்தவள்
செங்கீரையரடி யருளே
தெங்குபனைச் சோலைசூழ் துர்க்காபுரத்தரசி
செங்கீரை யாடியருளே.

பார்முதல அண்டங்கள் பூதங்கள் யாவுளும்
பரந்தாடும் ஆதிசக்தி
பார்க்கும் இடமெங்கணும் நீக்கமறு காட்சிதரும்
பராபரானந்த சக்தி
ஏர்பரவு நிலவளம் நீர்வளம் செழித்துமிளிர்
இயற்கை யைம்பூதசக்தி
இசைக்கலைகள் முதலாய அறுபத்து நான்குகொடை
இயக்கிடும் ஞானசக்தி
பேர்பரவு சரவுயிரும் ஏனையசங் கமவுயிரும்
பிராணன் முதலாயவாயு
பெற்றுணவுண் டெண்ணிய விதத்தில் நடமாடச்செயும்
பிரகாச மூலசக்தி
சீர்பரவு வீடுதவும் திருவருட் சத்தியே
செங்கீரை யாடியருளே
சிவநாம இசைவளரும் துர்க்கா புரத்தரசி
செங்கீரையாடி யருளே.

## தாலப்பருவம்

ஆதிப் பிரம்மப் பரம்பொருளில்
அலர்ந்த கருணைப் பெருஞ்சுடரே
அன்றும் இன்றும் என்றென்றும்
அழியாக் கைலை முடிவிளக்கே
போதப் பொருளும் பொருள்வழங்கும்
பொலிவும் கலையும் கலைத்தெளிவும்
புராண இதிகா சங்கள் சொலும்
புனித வரம்பும் புகுந்துணர்வார்க்
கோதிக் காணா உயர்ஞானம்
ஊட்டும் இமயத் துமையவளே
ஒன்றாய்ப் பலவாய்ச் சிவவடிவே
உடையா ளாகி விலகாத
பாதிப் பெண்ணாய் மருவுபரா
பரையே தாலோ தாலேலோ
பழனத் தெல்லி நகர்த்துர்க்கைப்
பைங்கிளி தாலோ தாலேலோ

பார்க்கப் பார்க்கப் பரவசமாய்ப்
பக்திப் புனலிற் படிந்தாடிப்
பற்று மடியார் மனங்குளிரப்
பார்க்கும் கடைக்கண் பார்வதியே
போர்க்குப் போவென வேல்கொடுத்துப்
புகழ்நீள் முருகத் திருமகனால்
பொருந்தா நிருதர் குலமழித்துப்
பொன்னவர் வாழ்வுற வைத்தவளே
ஆர்க்கும் சாம விசைமுழங்க
அடியெடுத் தாடும் மடப்பிடியே
அம்மா அம்மா எனஅழுவார்
அல்லல் அகற்ற அருட்பொய்கைத்
தீர்த்தம் கொடுக்கும் சிவகங்கைச்
செல்வம் தாலோ தாலேலோ
செவ்வாய் பகவான் தொழும்துர்க்கா
தேவி தாலோ தாலேலோ

தலைவன் தக்கன் தவத்துக்கு
ஜமுனையில் வந்தாய், வேதவல்லி
தாலாட் டும்தாட் சாயணியே
தவத்திற் கேட்ட வரப்படியே
மலையான் மகளாய் மேனைத்தாய்
மடிதா லாட்டும் பார்வதியே
மலையத் துவஜன் மனையாள்செம்
மனத்தாள் காஞ்ச னாமாலை
நிலவும் தமிழால் தாலாட்டும்
நீல முத்தனத் தடாதகையே
நெஞ்சம் குவிந்து நினைப்புகழும்
நீர்மை யில்லோம் புன்பாடல்
கலைகொள் தோட்டுச் செவிமடுத்துக்
கதிதரு பவளே தாலேலோ
காவியத் தெல்லி நகர்த்துர்க்கைக்
கரும்பே தாலோ தாலேலோ

சுருதி வாசகம் வரன்முறையில்
தொடர்ந்து கேட்கும் கிளிபேச
சுவைசேர் திருமுறைக் கானவிசை
சொர்ணக் கோகில வினமிசைக்க
மருவும் சப்த தாளத்தில்
மயிலின் கூட்டம் வந்தாட
மாவும் வருக்கையும் தேங்காயும்
வாழைப் பழக்குலை மீதுதிர
விரவும் மலர்கள் மது சொரிய
விரும்பும் சுரும்பர் ஒலித்துண்டு
வேண்டு மடியார் தமைக்கூவி
விருந்து கொடுப்ப தறிந்தமரர்
வருகை தொடரும் வளக்கோயில்
வதிவாய் தாலோ தாலேலோ
மழவிடை யேறி வரும்துர்க்கா
மணியே தாலோ தாலேலோ

ஆரூர்ப் பிருதிவி லிங்கத்தின்
அருகே கமலாம் பிகைஎனவும்
ஆனைக் காவில் அப்புவுடன்
அணைஅகி லாண்டேஸ் வரிஎனவும்
தேரூர் திருவண் ணாமலையில்
தேவி உண்ணா முலைஎனவும்
திருக்கா ளத்தி வாயுவுடன்
திகழும் ஞானப் பூங்கோதைப்
பேராள் எனவும் சிதம்பரத்தில்
பிரகா சிக்கும் சிவகாமிப்
பெண்ணமு தாயும் வீற்றமர்ந்து
பிரியா துருகும் அன்பருக்குப்
பாரார் சுகமும் பரசுகமும்
பாலிப் பவளே தாலேலோ
பாவலர் நாவினில் வாழ்துர்க்கா
பகவதி தாலோ தாலேலோ

வருந்தி உடலின் பசிஎடுக்க
வராக மாதா தனையழைத்த
வண்ணக் குருளை களுக் கிரங்கி
மாதா உருவில் வந்து சுகம்
பொருந்தப் பாலூட் டியநாதன்
புனிதப் பாகம் இருப்பவளே
புலவன் முத்துத் தாண்டவற்குப்
பொங்கமு தளித்த பூரணியே
தெரிந்து நினது புகழ்பாடிச்
சிலம்பொன் றிங்கே தருகவெனச்
சிற்பர கலைமக ளாயுதவிச்
செந்நாக் கம்பனைக் காத்தவளே
எரிந்த வெண்ணீ றணிவார்நெஞ்
சினில்தங் கம்மா தாலோ தாலேலோ
இயலிசை நாடகத் துர்க்கைபுரத்
தீஸ்வரி தாலோ தாலேலோ

உத்தம வகர மெனுமன்னை
உயர்ந்த சிகரத் தாதை தனை
உறுதி பிடிக்க உதவிடுவாள்
உண்மை யிதுவே தவமென்று
நித்தியம் கடலூர் அமிர்தேசன்
நெடும்பங் குறையும் அபிராமி,
நிரைகழற் பத்திப் பித்தாடும்
நிகழ்ச்சியில் உரைத்ததை நிலைநாட்டிச்
சத்திஓம் சத்திநீ காத்திடெனத்
தம்மடி யான்புகழ் உலகறியச்
சந்திரத் தோட்டினை வானெறிந்து
சம்பூ ரணியாய் நின்றவளே
சித்திரம் சிரிக்கும் துர்க்கைபுர
ஜெகதாம் பிகையே தாலேலோ
திருமுறை சதுர்மறை ஓதுமிடம்
திகழ்ஒளி தாலோ தாலேலோ

சீரும் கலையும் கலைப்பண்பும்
திரண்டு தெய்வ மனம்படைத்த
சிறந்த கமத்தொழில் புரிவோர்கள்
சேரும் உழுகொடைப் பதியினிலே
தாரும் சடையும் வெண்ணீறும்
தாமரை மேனியும் செந்துகிலும்
தாங்கிய கிழப்பெண் ணாய்வந்து
சந்ததம் அடியார் பூசிக்கும்
நேரம் சிரிப்பொலி சிலம்பினொலி
நிகழ்த்தி நின்றனை; நினைஇங்கே
நிதந்தங் கம்மா எனஓலை
நிழற்குடில் அமைத்திட இனிதமர்ந்தாய்
தேரின் முடிகார் முகில்கிழிக்கும்
சிற்பா லயத்தாள் தாலேலோ
திரண்டடி யார்வரும் துர்க்கைபுரச்
சிவாகரி தாலோ தாலேலோ

பொய்யாய் மலரும் புவிவ ழ்வை
பொருளென் றலமந் திரவுபகல்
பொன்னும் மண்ணும் தேடுதற்குப்
பொழுது போக்கி யலைந்தேனை
மெய்யாம் ஞான மலர்த்திலகம்
வினையேன் இலாடம் தனிலிட்டு
வேதமுத் திரையென் நாவழுத்தி
விளைதமிழ்க் கவிதைகள் பாடென்ற
செய்யா ளேகலைக் களஞ்சியமே
சித்தம் இயக்கும் சக்கரமே
தேனே கமலத் திலைநிற்கும்
தெண்ணீ ரனைய வாழ்வொருவி
உய்யா துய்யும் தவம்காக்கும்
உழைப்புத் தந்தாய் தாலேலோ
உழுகொடை மேவிய துரக்கைபுரத்
துத்தமி தாலோ தாலேலோ
சங்கரன் நெற்றிப் பொறியாறும்
சார்வளி எரிபுனல் தாங்காது
சரவணப் பொய்கை கொணர்ந்துய்ப்பச்
சண்முக நாயகன் எனஉதித்த
தங்க சொரூபன், கார்த்திகையார்
தருமுலை யருந்தி விளையாடித்
தவழறு குழவிக ளாய்நடிக்கத்
தாவித் தழுவிக் கந்தனெனப்
பொங்கும் திருமுலைப் பாலூட்டிப்
பொருந்தும் வேதப் பொருள்பாடிப்
பொன்மடி கிடத்தித் தாலாட்டிப்
புதுமொழி மழலை கேட்டவளே
சங்கத் தமிழின் முதுதலைவி
தமியேற் கிரங்காய் தாலேலோ
சந்தன வீதித் துர்க்கைபுரச்
சாந்தினி தாலோ தாலேலோ

பாரார் சுகங்கள் தருங்கமலப்
பாதம் பலகனிச் சுவைமணக்கும்
பயிலும் ஒட்டி யாணத்தில்
பால்தேன் மணக்கும் பட்டுடையில்
தாரார் மலரெல் லாம்மணக்கும்
தனக்கச் சிற்கஸ் தூரியொடு
சாந்து மணக்கும், மறைமணக்கும்
சந்திர வதனம், வாணுதலில்
பேரார் நீறொடு ஐவ்வாது
பேணும் திலகத் தருள்மணக்கும்
பேரன் பமுதம் வாய்மணக்கும்
பின்னற் சடையில் அகில்மணக்கும்
சீரார் மேனி சிவம்மணக்கும்
செல்வக் குழந்தை தாலேலோ
சேணார் கோபுரத் துர்க்கைபுரத்
திரவியம் தாலோ தாலேலோ

# சப்பாணிப்பருவம்

அண்டங்கள் ஏங்கணும் சத்திமயம் என்று மறை
அறைகின்ற வாறெண்ணி நான்
ஆவலுடனுலகிலுள தலமெலாம் ஓடினேன்
ஆறுமலை வாரி குளங்கள்
மண்டிவளர் சோலைவனம் வரண்டபெரும் பாலைவனம்
வழிமாறித் தேடியலுத்தேன்
மன்னுதிரு முறையாதி முன்னோரின் நன்னூல்கள்
மாமுனிவர் வாக்கியங்கள்
கண்டபடி யேகற்றுத் தனியே இருந்துமனம்
களையாமல் தியானம் செய்தேன்
கண்டிலேன் நின்னழகைக் கண்டுகுளிர்ந் தேனிந்தக்
கலைவண்ணக் கோயிலுள்ளே
தண்டைகிண் கிணியசையச் சதிராடி யதுபோதும்
சப்பாணி கொட்டியருளே
சைவமுயர் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

ஆலயத் தொண்டென்ன நீறென்ன மணியென்ன
ஆகம மந் திரங்களென்ன
அறமென்ன தவமென்ன சமயங்க ளென்ன இவை
ஆக்கிடும் சுகங்களென்ன
வேலையற் றோர்சொல்லும் பைத்திய வழக்கமென
விழல் பேசி இகழுவோரும்
வினைகூடி நோய்முற்றி மிடியினா லலைவுற்று
வெறுத்துலகு துரத்தி நகைக்க
ஞாலமிசை எனக்கொருவர் துணையில்லை யம்மா, இந்
நாயேனைக் காத்திடென்று
நாடிவரும் கொடியோரும் அடியார் எனக்கொண்டு
நலமெலாம் நல்குந்தாயே

சாலமிகும் ஆடல்புரி சாரங்கன் தங்கைச்சி
சப்பாணி கொட்டியருளே
சாந்திதரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

கண்டதே காட்சியாய்க் கொண்டதே கோலமாய்க்
கற்பனைகள் பலபுரிந்தேன்
கண்மூடிக் கங்குல்பகல் கலையாத மௌனியாய்க்
கருத்தைத் திருத்தமுயன்றேன்
தொண்டரினம் சூழாது வாய்ஞானம் பேசுவார்
சொல்வலையிற் சிக்கியலைந்தேன்
சுத்தசன் மார்க்கசிவ சோதியைக் காண்பதுன்
துணையின்றிக் கைகூடுமோ
மீண்டுமகி டாசுரனைத் துண்டாக்கி வென்றவெவ்
விறலியே கருணைக்கடலே
விரதசா வித்ரிதன் கணவனா ருயிர்மீட்க
விரும்புவரம் கொடுத்த கௌரி
சண்டனையும் முண்டனையும் சமரிட்டழித்தவள்
சப்பாணி கொட்டியருளே
தவமுயரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

பிருதிவிதத் **துவவாமை** ஜலதத்வ **ஜியேஷ்டை** விண்
பெருகுமக் கினி **ரௌத்திரி**
பெருவாயு **காளி**, ஆ காசம்பல **விகாணி**
பேண் செழுமை **பலவிகரணி**
பொருகொடுமை தடுத்தருளும் **பலப்பிரத மணி** ஆன்ம
புண்யபா வம் புரக்கும்
புகழ்ச் **சர்வ பூததம** **னிசிவனின்** அம்சமாய்ப்
போற்றும் **மனோன்மணி**யெனப்
பரவுநவ சத்திகளும் ஒன்றாய்த் திரண்ட சிவ
பரப்பிரம்ம மகாதேவியே
பஞ்சமே யற்றநன் நெஞ்சினார் காணுமொரு

பதுமநிற ஞானமகளே
சரணமலர் நமதுதலை சூட்டியருள் தருமன்னை
சப்பாணி கொட்டியருளே
தமிழ்வளரும் தெல்லிநகர்த் துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

ஒருசிவனி னருட்சத்தி ஓங்குபல சக்தியாய்
ஓதரிய உலகமெல்லாம்
ஒப்பரிய **பிராமி நா ராயணி மகேஸ்வரி**
ஒளிர்வேற் **கௌ மாரி** ஊழிப்
பிரளயத் துலகுதரும் **வாராகி இந்திராணி**
பெருஞ்சிங்க மேறும்**காளிப்**
பெயருடைய மாதெழுவ ராகிமன் பதைதமைப்
பெற்றணைக்கும் தெய்வமே
மருவுமிச் சாசத்தி வழங்குகிரி யாசத்தி
வரம்பிலா ஞானசத்தி
மலரும் சகஸ்ரதளக் கமலபூ ரணியெனும்
மறைமுடிசொ லாதசுடரே
தருமவடி யவர்மனம் தங்குகல் யாணியே
சப்பாணி கொட்டியருளே
தலமோங்கு தெல்லிநகர்த் துர்க்காபுரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

உளமுருகிக் கற்றகலை தெள்ளித் தெளிந்தபொருள்
உனதென்ற அறிவும் - அறிவால்
உற்றபே ரன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம்
உயர்வாய்மை தோய்ந்த சால்பின்
வளரகல் விளக்கிட்டு மனாதீத வெளியிலே
மதியேணி பற்றியேறி
வந்துநின் திருவடி பிடிக்கின்ற மார்க்கமும்
வழுவா தெனக்கருளுவாய்
களவு கொலை பொய்சூது கட்காமவஞ்சமுறு
கயவரிடை யூறு செய்து
கருத்தைக் குலைக்காமல் மெய்வாய்கண் செவிமூக்கு
கலந்தொன்றி நின்னடிக்கே

தளர் விலாப் பணிசெய்யும் பேற்றையும் தருமன்னை
சப்பாணி கொட்டியருளே
தருமங்கள் வளர்கின்ற துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

பூவும்நீ ருங்கொண்டு பூசித்திலேன் தினம்
புந்தியிலைந் தெழுத்தை யெண்ணிப்
போற்றுகில் லேன்நான்கு மார்க்கமறி யேன் வேதம்
புகலுமுண் மைகள்அறியேன்
ஓவரிய திருமுறைக ளோதியறி யேன்ஓதி
உணர்ந்தவரை நாடியறியேன்
உயிரென்று பதியென்று பாசங்க ளென்று மூன்
றுண்டென்று கேட்டுமறியேன்
தேவியே நீயிருக் கின்றனை எனும் துணிவு
சித்தமிசை பூண்டுகொண்டேன்
தீராத பாவியே னானாலு மடியேனைத்
திருக்கண்ணாற் பார்க்கொணாதோ
தாவுநமன் வரும்வேளை தமியேன்முன் நிற்பவள்
சப்பாணி கொட்டியருளே
தருமங்கள் வளர்கின்ற துர்க்காபுரத் திறைவி
சப்பாணி கொட்டியருளே

கண்ணுக் கடங்காத இயற்கையின் காட்சியும்
காட்சிகள் நிகழுகின்ற
காரணங் களுமவற் றின்கருவி களுமாகிக்
காலாதிகால மெல்லாம்
எண்ணுட னெழுத்தாகி, இவற்றினை உணர்த்திடும்
இதய யந் திரமுமாகி
எதிர்காலம் நிகழ்காலம் இறந்தகா லம்சொல்ல
இயலாத ஒளிப்பிழம்பு
வண்ணமாய் நிற்கின்ற நின்னைஎவ் வடிவிலே
மனத்திரையில் எழுதிக்காண்பேன்
வந்தவர் பணிந்தவர் வழுத்தினர் தொண்டர் குலம்
வருந்தாமல் அருகிருந்து
தண்ணருள் பொழிகின்ற அருளமுத சுரபியே

சப்பாணி கொட்டியருளே
தருமங்கள் வளர்கின்ற துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

இனத்தோடு பெற்றவரும் எழிலான தொட்டிலிட்
டிசைவான தாலாட்டுடன்
இனிதே வளர்த்திட்ட இத்தேகம் சந்தேகம்
எமராச தூதர்வந்து
சினத்துட னிழுக்கும்போ துனதுதிரு நாமங்கள்
செப்பிவெண் ணீறணிந்து
தேடியஎன் செல்வமே நடராஜ வல்லியே
சிறியேனைக் காத்தருளெனக்
கனத்தவளைக் கைகளிற் பாசாங்கு சங்கொண்டு
கன்னியர் குழாங்கள் சூழக்
கடையனேன் காணமுன் நிற்பாய் மயானத்தில்
காத்துநிற் பாள்துணைவியே
சனத்திர ளிசைக்கமணி ரதமேறி வருமழகி
சப்பாணி கொட்டியருளே
தருமங்கள் வளர்கின்ற துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

பிரியாத கணவனை வேடுவ னுதைக்கவும்
பெரியோரின் சபைநடுவிலே
பித்தா எனத்தூற்றிப் பிராமணன் பேசவும்
பெரியகல் லாலெறியவும்
வரிநாணின் வில்லினால் வந்தவ னடிக்கவும்
மண்சுமந் தடிவாங்கவும்
மனம்பொறுத் தாயுங்கள் நினைவான பக்தரின்
மாசின்மை கண்டல்லவோ
எரிவாயின் வெண்ணெயென உளமுருகி யலையுமெம்
மின்னலைத் தீர்த்திடாமைக்
கியாம்செய்தபிழையென்னென் றுரைத்துத்திருத்தலுனக்
கியலாத ஒன்றல்லவே
தரியாத கிரகநிலை புதிதாய் நிகழ்த்துபவள்
சப்பாணி கொட்டியருளே
தருமங்கள் வளர்கின்ற துர்க்கா புரத்திறைவி
சப்பாணி கொட்டியருளே

# முத்தப் பருவம்

நாத விந்து கலைமலரும்
நமச்சி வாய நாயகியே
நம்பன் கருமம் நடத்துதற்கு
நயந்த துணையாய் இருப்பவளே
ஓதி உணர்தற் கரிதாகி
ஒளியாய் ஒலியாய் உயிர்க்குயிராய்
உண்ணின் றியக்கும் குண்டலியே
ஓதிடு மைம்பத் தோரெழுத்தே
மோதும் பகையார் சாணூரன்
முஷ்டிகன் தம்மை விண்போக்கி
முழங்கும் கம்சன் என்பானை
முனைந்த போரில் கொன்றொழித்த
கீதைக் கண்ணன் சோதரியே
கிருபா முத்தந் தந்தருளே
கேடில் லாத துர்க்கைபுரக்
கிழவி முத்தந் தந்தருளே.

மாமுக மாருதப் பிரவல்லி
வருத்தம் தணித்த வடிவேலன்
வளரும் விஜய தசமியில் நீ
மகிஷனை மாய்க்கும் போர்க்குதவ
மாமிசை யேறி வரும்போது
மகனே வாவென் றெதிர்நின்று
வரிசைகள் விருதுக ளுடனழைத்து
மலர்க்கர மணைத்து வாழ்த்துரைக்கும்
சாமள சந்திர ரூபிணியே
தாங்காக் கொடிய பிணிநீக்கிச்
சாவா மருந்து தருபவளே
தனியே இருப்பார்க் குச்சிநடுத்
தாமரை நடுவிருந் தமிர்தத்தைத்
தருவாள் முத்தந் தந்தருளே
சண்பகச் சோலைத் துர்க்கைபுரச்
சங்கரி முத்தந் தந்தருளே

பகரும் பலநூல் படித்தாலும்
படித்தோ னெனப்பேர் எடுத்தாலும்
பக்தியில் தோய்ந்து படியாதார்
பார்வதி யேயுனைக் காண்பாரோ
அகர வுயிர்போல் அறிவாகி
அமைந்த மாதா நினையறிய
ஆதி மூலா தாரமுதல்
ஆறாம் படிவரை தியானித்தேன்
மகிழும் பேறு கிட்டாமல்
மற்கட மொப்ப மலைகின்றேன்
வகரச் சிகர வழியறியும்
மதிதந் திடையூ றொழியாயோ
சகட மிறுத்த கணபதியின்
தாயார் முத்தந் தந்தருளே
தவத்தோர் வாழும் துர்க்கைபுரச்
சாம்பவி முத்தந் தந்தருளே.

ஆவதை செய்து பரம்பொருளின்
ஆலயம் இடித்துக் களவாடி
அன்னை பிதாவை அவமதிக்கும்
அநியா யங்கள் முதலாய
பாவம னேகம் புரிந்தோனும்
பரையே நின்றன் சந்நிதியில்
பகலிர வாகக் கிடந்தரற்றிப்
பழியைப் பொறுத்துக் காத்திடென
மூவர்க் கரிய நின்கணவன்
முன்சென் றிரந்து நரகவினை
முயன்றா னாயிலும் நீறணிந்து
முட்டாத் திருத்தொண் டாற்றுகிறான்
காவும் கணக்கை மாற்றுகெனும்
கன்னி முத்தந் தந்தருளே
காவடி யணிவரும் துர்க்கைபுரக்
கற்பகம் முத்தந் தந்தருளே

பங்கய னோதிம மாய்ப்பறந்தும்
பாற்கடற் பகவன் வராகமெனப்
பாதலம் துளைத்தும் காண்பரிய
பரமன் சோதிக் கிரியாகிப்
பொங்கிய சிவராத் திரிநாளில்
புகுந்திடு மாயா இருளெம்மைப்
பொருந்தா வண்ணம் சிவலிங்கப்
பூசனை யாற்றிய புராதனியே
சங்கரன் வாக்கே நோக்கிமறை
தவறா தெடுத்துத் திருநந்தி
சனற்கு மாரர் வியாசரிடம்
தந்து புராண வகைவிளக்கும்
குங்குமச் சந்தனம் கமழ்மேனிக்
குமாரி முத்தந் தந்தருளே
கொடைகள் மலிந்த துர்க்கைபுரக்
கோமதி முத்தந் தந்தருளே.

பிருங்கி முனிவன் தவமுதிர்வால்
பிரியாச் சத்தி நின்னாலே
பெரும்பே றடைந்த நிணைவிழந்தான்
பிறையணிந் தவனே போதுமெனச்
சுருங்கி வண்டாய்த் தொழுமவனைத்
தொடுத்த வலிமையை நீயொழிக்கத்
துணைக்கை ஊன்று கோல்கொடுத்த
தொழிலைக் கண்டு மனமுடைந்து
பெருங்கே தார நோன்பியற்றிப்
பெருமான் பாதி படைத்தவளே
பேதித் தெம்மை வளர்த்தெடுத்த
பெய்வளை உண்ணா முலையாளே
நெருங்குங் காலன் தனைஉதைத்த
நிருத்தனி முத்தந் தந்தருளே
நித்தில வீதித் துர்க்கைபுர
நிரஞ்சனி முத்தந் தந்தருளே

உம்பரும் மிம்பரும் உலகனைத்தும்
உயிரை மறந்த முனிவரும்
ஒண்டிசை யதிபரும் மூவர்களும்
உள்ளங் கலங்கும் இடர்புரிந்த
சும்பன் நிசும்பன் எனுமசுரத்
துட்டர் தம்மையும் துணைவரையும்
தொலையா இரத்த பீஜனையும்
துண்டுகள் ஆக்கி வெற்றிகொளும்
அம்பிகை யேபொன் னம்பலத்தில்
அரவும் புலியும் தவத்தினரும்
அநுதினம் காணும் நாடகங்கள்
ஆற்றிடும் தனிப்பெண் பாத்திரமே
நம்பும் தொண்டர் பணிமறவா
நல்லாள் முத்தந் தந்தருளே
நத்தினம் முழங்கும் துர்க்கைபுர
நாரணி முத்தந் தந்தருளே.

ஒவ்வாப் பிறவி பலவெடுத்தேன்
உயிர்கள் பற்பல வதைத்துண்டேன்
உள்ளம் சிதறும் வெகுளிஅவா
உடற்று மழுக்கா றின்னாச்சொல்
துவ்வா மதுவொடு தோகையரைத்
தொடரும் பித்த லாட்டங்கள்
தூண்டும் கயவர் கூட்டங்கள்
சுகமென் றெண்ணிய கொடியேன்யான்
எவ்வா றுனது பணிபுரிவேன்
எப்படித் தோத்திரம் செய்திடுவேன்
இழிந்த பிள்ளை யானாலும்
எடுத்தணைக் காத தாயுண்டோ
செவ்வாய் முதலாம் கிரகநயம்
செய்வாள் முத்தந் தந்தருளே
சித்திரம் பேசும் துரக்கைபுரத்
திரிபுரை முத்தந் தந்தருளே.

உருவாய் அருவாய் அருவுருவாய்
ஒன்றாய்ப் பலவாய் உணர்வுடையோர்
உள்ளக் கமலத் தோவியமாய்
ஓவியம் பூத்த காவியமாய்
மருவாய் மலராய் மலர்களுக்கு
வண்ணம் பலவாய் வண்ணங்கள்
வழங்கும் ஏழ்பரிச் சூரியனாய்
மதியாய் மதியைச் சூடிக்கும்
கருவாய் கருவில் உதிக்கின்ற
கலையாய் கலைகள் செயலாற்றும்
காட்சி யாயறம் பொருளின்பம்
கலந்த வீட்டுக் கதியெல்லாம்
தருவாய் குருவாய் அடியர்மனம்
தரிப்பாய் முத்தந் தந்தருளே.
தருகொடை உழுகொடைத் துர்க்கைபுரச்
சடேஸ்வரி முத்தந் தந்தருளே.

கச்சூர் ஆலக் கோயிலிலே
களைத்து வந்த சுந்தரர்க்கு
கருணை கிடந்த மனைதோறும்
கைப்பாத் திரத்தில் யாசித்த
இச்சோ றுண்பாய் எனத்தந்த
ஈசன் கருணா கரமூர்த்தி
இசைந்த திருமணத் தெஞ்சியதை
இனிதுண் டிடுங்குண் டோதரற்கு
நெய்ச்சோ றுதயிர் நீர்கொடுத்து
நிறைந்த திருப்தி கண்ட சிவன்,
நெஞ்சுக் கினித்த கிஞ்சுகமே
நின்பொற் கோயில் வந்தார்க்கு
மெய்ச்சாந் திமடச் சோறுதரும்
விடையாள் முத்தந் தந்தருளே
விவாக சோபனத் துர்க்கைபுர
விமலினி முத்தந் தந்தருளே.

## வருகைப் பருவம்

அன்பு மலையே வருக அருள்
அமுதே வருக ஐந்தடக்கி
அறிவால் அறியும் பேறுடையார்
அகத்து மணியே உலகுக்கு
முன்பே அடிமுடி நடுவில்லா
மூலக் கொழுந்தாய் நின்றவளே
மொட்ட றாமலர் கைக்கொண்டு
முட்டாப் பூசனை செய்வோர்காண்
இன்பே வருக ஏடணையால்
இடையூ றின்றித் தியானிக்க
ஏணி யருள்வாள் வருகஇசை
ஏழாய் விளங்கும் இலஞ்சியமே
மின்பாய் நேமி வளைதாங்கும்
விஷ்ணு சகோதரி வருககலை
விளைபயில் நிலையத் துர்க்கைபுர
விதரணி வருக வருகவே.

முத்தே வருக மூவர்க்கும்
முத்தாள் வருக ஐவர்க்கு
மொழிந்த தூது சென்றஅரி
முகுந்தற் கிளையாள் வருக, உயிர்
வித்தே வருக வேண்டுபவர்
வினையின் மூல வேரறுத்து
வேதம் பரவும் பாதமலர்
விருந்து தருவாள் வருக மலம்
செத்தார் காணும் செம்பொன்னே
சிருட்டிக் கென்று வடிவெடுத்து
ஜெகதல மெல்லாம் கணக்கிட்டுச்
செப்பற் கரிய அனந்தசக்திக்
கொத்தாய்ப் பரந்த குருஞானக்
கொடியே வருக தெய்வீகம்
குடிகொண் டிருக்கும் துர்க்கைபுரக்
குமுதினி வருக வருகவே.

பாதிப் பிறையோன் திருமேனிப்
பவளப் பிரபை நின்வதனம்
படிந்து சிவந்த சுடர்வீச
பறவைப் பார்ப்புக் கூட்டமிசை
ஓதிப் பொழுது விடிந்ததென
ஒலிக்கப் பசுக்களின் கன்றுகள்பால்
உண்பான் கதறக் கற்றாக்கள்
உணர்ச்சி பொங்கி மடிசொரிய
வீதி முழுதும் பாலாற்று
வெள்ளம் பாய்ந்து குதித்தோடி
விரையார் துர்க்கா புஷ்கரணி
விழுந்து நிரம்பத் தேவகுலம்
மோதிக் கடைவோம் எனமறுகும்
மோகனத் தலமுறை வாய்வருக
முழவு முழங்கும் துர்க்கைபுர
முத்தே வருக வருகவே.

எந்த வடிவில் நினைத்தாலும்
இதமாய் அந்த வடிவில்வரும்
எம்பெரு மாட்டி வருக மயில்
ஏந்திழை வடிவில் சிவபூசை
வந்து புரிந்த கற்பகமே
மல்கு கண்ணீர் முகத்துடனே
மாதா மனத்துயர் தீரென்று
வருந்தி யழுவார் யாவர்க்கும்
தந்தம் குறைகேட் டருள்வழங்கும்
சைலாம் பிகையே வருக இசைச்
சாம வேதம் கேட்டுடல்
தவிர்ந்த தையல் வருக — மலர்
சிந்தும் தேனதி பாய்ந்தோடும்
செஞ்சடை யாளே வருக, தமிழ்த்
திருமுறை ஒலிக்கும் துர்க்கைபுரச்
சிற்பரை வருக வருகவே.

அம்மா வருக அன்பருவி
அலைபாய் பக்தி வயல்விளைந்த
அமுதே வருக அர்ச்சுனனுக்
கருள்க பாசு பதமென்று
பெம்மா னிடத்தே நின்றிரந்த
பிராட்டி வருக மதுரைநகர்
பெருங்கோ லோச்சிய தடாதகையே
பிறங்கும் காவற் கணேசனென
இம்மா நிலமுத லுலகெல்லாம்
இடையூ றகற்றும் பெருந்தகையாய்
இபமா முகனைப் பெற்றவளே
எல்லா மடக்கி இருந்தவிடம்
சும்மா விருக்கும் சுகங்காட்டும்
சோதி வருக தேனுமணி
சுரக்கும் பழமைத் துர்க்கைபுரச்
சுமங்கலி வருக வருகவே.

தெங்குயர் பூகம் பனைஇருப்பை
தேனார் கொன்றை வில்வைமகிழ்
செண்பகம் நெல்லி மந்தாரை
செம்மலர்க் கடம்பார் நந்தவனம்
தங்கும் வேலி எனஅமைய
தரியாச் சுரும்பர் தேன்மாந்தி
தண்ணீர்த் துர்க்கா புஷ்கரணித்
தனையவிழ் அம்புய மேற்படிந்து
பொங்கும் புனலைக் குடித்தினிமேல்
பூத்தேன் வேண்டாம் யாமீண்டே
புகலிட மாக வதிவமெனும்
புண்ணிய தீர்த்தம் தலம் மூர்த்திச்
சங்கை மிகுந்த பதிமேவும்
சௌந்தர ராணி வருக, மனச்
சாந்திசு கந்தரும் துர்க்கைபுரத்
தயாபரி வருக வருகவே.

ஆத்தாள் வருக ஐந்துநிற
அழகி வருக அலங்கார
அரியே றமர்ந்தாள் வருக, மறைக்
கப்பால் நின்றாள் வருக, புவி
பூத்தாள் வருக பூத்தவிதம்
பொருந்து மிருக்க போகங்கள்
புகுத்தி வகுத்தா ருயிர்த் தொகையைப்
புனித பவத்திற் கிடங்காட்டிக்
காத்தாள் வருக கால்தூக்கிக்
ககன வட்ட வீதியிலே
காணா நாடகம் நடித்தெம்மைக்
காமியத் தழுந்தாக் கண்காட்டும்
கூத்தாள் வருக பிரணவத்தின்
கொழுந்தே வருக சந்தானம்
குளிரக் கொடுக்கும் துர்க்கைபுரக்
குமாரி வருக வருகவே

வளவர் கோன்மகன் தேரேறி
வரும்போ தான்கன் றிறந்ததனால்
மகனின் மார்பில் தேர்செலுத்தும்
மனுநீ திக்காய் வந்தருளும்
இளமதி வேணியன் இடப்பாகம்
இருக்கும் குயிலே வருக தமிழ்
இன்பப் பெருக்கே வருக நரம்
பிசைவடி வாளே வருக, கலை
அளவிட் டறியாப் பெருங்கடலே
அன்பு மலையே வருக, நின
தடியார் அகத்தில் குடியிருக்கும்
ஆத்தாள் வருக, புராணநெறி
வளரும் தெல்லிப் பதிவாழ்வே
வருக புண்ணிய மாதர்கள்தேர்
வடம்பிடித் திழுக்கும் துர்க்கைபுர
மாதா வருக வருகவே.

உன்னை யல்லா துளத்தினிலே
உதிக்கும் தெய்வம் பிறிதில்லை
உன்னை எண்ணி வாழாதோர்
உலகில் ஏற்றம் பெறவில்லை
உன்னை யின்றிக் கலைஞானம்
உள்ளக் கமலத் துதிக்காதே
உன்னை வணங்கா மாதவத்தோர்
ஓங்கா ரச்சுடர் காண்பாரோ
என்னை இயக்கும் பெருந்தாயே
என்னால் எதுவும் நடப்பதில்லை
என்னுள் ளத்தை நீயறிவாய்
என்னம் மாஉனை யானறியேன்
பொன்னற் பாதம் என்சென்னி
பொருந்த வைப்பாள் வருக, முறைப்
பூசனை வழுவாத் துர்க்கைபுரப்
பூரணி வருக வருகவே.

என்னுயி ரோடிவ் வுடலினையும்
இணைத்த இராசேஸ் வரித்தாயே
என்னுள் இருந்து கவிபாடும்
இதயத் தாமரைப் பூமகளே
உன்னை முழுதும் காணுவதற்
கொடுங்கி வணங்கி எய்த்தேனே
ஒருநா ளொருவடி வாய்வருவாய்
உயர்ந்த யோகம் எனக்கில்லை
என்ன செய்வேன் இவ்வுலகில்
எவர்தான் துணையென வருவாரோ
இராட்சதக் குணமக னானாலும்
எடுத்தணைக் காத தாயுண்டோ
பன்னக மாதர் தாலாட்டும்
பசுங்கிளி வருக திருவோணப்
பானீர் ஆடும் துர்க்கைபுரப்
பவானி வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

பொன்னார் அழகினைப் பூண்டவனே
புணரியைப் பெருகச் செய்துமழை
பொழிவாய், புவனம் வளங்குளிரப்
பொலிந்து நவநிதி தருவோனே
மின்னார் அனல்புரை வேணியனாம்
விடையோன் தனக்கு நிகராக
விளங்கும் ஞானாம் பிகையாங்கள்
மெய்வா டாமல் விழைந்தவரம்
இன்னே பெறுதி எனக்கொடுக்கும்
இலிங்க காரணி இமையோர்கள்
எண்ணற் கரியாள் அடியவர்கட்
கெளியாள் திருவை யாற்றூரில்
அன்னா காரம் முதலறங்கள்
அளிப்பாள் எமக்காய் வந்தமர்ந்தாள்
அணிதெல் லிநகர்த் துர்க்கையுடன்
ஆடிட வருவாய் அம்புலியே.

இருபத்தாறு கன்னியருக்
கிழைத்த பிழையால் நின்மாமன்
இட்ட சாபம் தனைவாங்கி
இளைத்தாய் நாளுக் கொருகலையாய்
கருகித் தேய்ந்தாய் கடவுளர்கள்
கடிதே துரத்தி நகைசெய்யக்
கலங்கி வேறொரு கதியின்றி
கைலை நாதனின் கழல்விழுந்தாய்
உருவம் இனிமேல் தேயாமல்
உவந்து சடைமேல் சூடுகையில்
உமையாள் தடுத்தால் உன்னிலைமை
ஒருகலை தானும் இருக்காதே
அருளே உருவ மாகியபா
லாம்பிகை அன்பாய் அழைக்கின்றாள்
அணிதெல் லிநகர்த் துர்க்கையுடன்
ஆடிட வருவாய் அம்புலியே.

தேய்வதும் வளர்வது மாயிருப்பாய்
திங்கட் கொருநாள் முழுமதியாய்த்
தேசம் துதிக்க வந்திடுவாய்
தேகத் துனக்குக் கறையுண்டு
காய்முக மின்றிக் கனிமுகமாய்
காலமெல் லாம்பொலி முழுமதியாய்
கறைகுறை யில்லா நிறைவுடனே
கண்ணிய புண்ணிய வாரிதியாய்த்
தாய்முதல் சுற்றம் நலமெல்லாம்
தானாய் இருந்து வழியடியோம்
தவிக்கா துவந்து தருகின்றாள்
தமிழ்முச் சங்கம் தருதலைவி
யாய்மறை ஆகமம் அறிமுகம்செய்
அங்கயற் கண்ணி அழைக்கின்றாள்
அணிதெல் லிநகர்த் துர்க்கையுடன்
ஆடிட வருவாய் அம்புலியே.

போற்றும் நவகோள் தம்முள்ளே
புதனைப் பெற்ற தகப்பனுனைப்
புஜங்கர் இராகு கேதுக்கள்
புகுத்தி உமிழ்வதை உலகறியும்
கூற்றம் என்முன் னேவந்தால்
கொடும்பா சத்தைத் தடுப்பாயோ
கும்பிட் டலகிட் டறலிட்டுக்
குலமல ரிட்டுத் திருமுறைகள்
சாற்றும் தொண்டர் சாவாது
தம்மடி சேர்ப்பவள் எம்மிறைவி,
சதுர்முக வேதனை யழைத்தெமக்குத்
தனிக்கணக் கெழுதப் பணித்திடுவாள்
ஆற்றைப் புனைவான் அருகிருக்கும்
ஆண்டவள் நின்னை அழைக்கின்றாள்
அணிதெல் லிநகர்த் துர்க்கையுடன்
ஆடிட வருவாய் அம்புலியே.

மூவா முதல்வி முக்கண்ணி
முனிவரும் தேவரும் சித்தர்களும்
முறைமுறை நின்று புரிகின்ற
முதிர்பூ சைக்கும் எட்டாதாள்
வாவா வென்றுனை வரவேற்கும்
மதிப்பைக் குறைத்துக் கொள்ளாதே
மண்டல மாக்கி, ஆக்கியதை
வளர்ப்பதும் அழிப்பதும் இவளாற்றல்
பூவார் கற்பகச் சோலையிவள்
பொறுப்பி லிருப்பதை அறியாயோ
புவன மசைவதும் இரவுபகற்
பொழுதுகள் நிகழ்வது மிவளாலே
ஆவா கனிஅகி மாலினிசிங்
காசனி ஆரணி திரிநயனி
ஆகிய தெல்லித் துர்க்கையுடன்
ஆடிட வருவாய் அம்புலியே

வேறு

சகத்துயர் தீர்க்கும் **வனதுர்க்கா**
தகுமுத் தொழிற்சூ **லினிதுர்க்கா**
சங்கரன் நுதல்விழித் தீப்பொறிகள்
தாங்கிய **ஜாதவே தோதுர்க்கா**
மிகுத்தெழு நரசிங்கர் சீற்றத்தின்
வீறடக் கியதிருச் **சாந்திதுர்க்கா**
வேடிச்சி யாகிய **சபரிதுர்க்கா**
மிண்டுபண் டனைவெலும் **ஜுவாலதுர்க்கா**
இகற்படும் லவணா சுரனைவெல்ல
இராம னிறைஞ்சிய **லவண துர்க்கா**
இதஞா னந்தரும் **தீபதுர்க்கா**
ஏழ்பவத் தொடருறு மூவாசை
அகத்த றுக்கும்ஆ **ஸுரிதுர்க்கா**
ஆகிய நவதுர்க்கைப் பொலிவுடனே
அமர்ந்த தெல்லித் துர்க்கையுடன்
ஆடிடவருவாய் அம்புலியே.

**வேறு**

ஓமெழுத்துள் ஐந்துபத்தோர்
உச்சரிக்கும் அட்சரமாய்
ஒளிப்பிழம்பாய்ச் சுடர்வீசும்
ஒப்பரிய மெய்ப்பொருளாய்
தாமரைப்பூ மேனியுடன்
சக்கரம்சங் கம்புவில்லு
தருமதிரி சூலமிவை
தாங்கபயம் வரதமுடன்
சாமமறை சூழ்ந்திசைக்கச்
சல்லாபச் சிங்கத்திலே
தரளநகை வாய்மலரச்
சங்கரனார் தாலிமின்ன
ஆமலக வீதிவரும்
ஆதிபரா சத்தியிவள்
அரியதெல்லித் துர்க்கையுடன்
ஆடிடவா அம்புலியே.

* ஆமலகம் - பளிங்கு

**நவதுர்க்கா**

**வன துர்க்கா :**

தன்னிடம் சரணடைந்தவர்களைச் சம்சாரமாகிய வனத்திலிருந்து காப்பாற்றுவாள். தங்கத்தாமரையில் வீற்றிருந்து, சங்கு-சக்கரம் ஏந்தி, வரத அபயத்தோடு சந்திரக்கலை தரித்துக்கொண்டு, கடகம்-ஹாரம்-குண்டலம் அணிந்து, சிம்மத்தில் வீற்றிருந்து முக்கண்ணுடையவளாய் அருள்பாலிப்பவள்

**சூலினி துர்க்கா :**

சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்ற தொழில்களைச் செய்பவள். சூலபாணியாய் விளங்குவதால் சூலினி என திருநாமம் பெற்றவள். மேகம் போன்று நிறம் கொண்டு, பெரிய கிரீடத்தை சிரசில் தாங்கி கோரமான கத்தி, கேடயம் சூலம் அம்பு சக்கரம் சங்கு கதை வில் பாசம் இவ்வாயுதங்களை எட்டுக் கைகளில் ஏந்தி சிம்மத்தின்மீது அமர்ந்து ரட்சிப்பவள்.

**ஜாதவேதோ துர்க்கா :**

அக்னி வடிவில் விளங்குபவள், சிவன் நெற்றிக் கண்களிலிருந்து எழுந்த தீப்பொறிகளை அம்பிகை அக்கினிஸ்வரூபமாய்இருந்துகங்கையில் கொண்டுசேர்த்ததினால் ஜாதவேதா துர்க்கா என வழங்கப்பெறுகிறாள். மின்னல்போல் ஒளிப்பவள் பயங்கரமானவள் சந்திரக்கலை தரித்து முக்கண்ணனோடு கூடி அக்னிஸ்வரூபத்தோடு சக்கரம், கதை, கத்தி, கேடயம், அம்பு, வில் பாசம், முத்திரைகொண்ட எட்டுக்கரங்களோடு சிம்மத்தின்மீது அமர்ந்து அருள்பவள்.

**சாந்தி துர்க்கா :**

நரசிம்மரின் கோபத்தை அடக்க யாராலும் முடியாத காரணத்தால் தேவர்கள் மகாலட்சுமியை நாடி அவள் மூலம் நரசிம்மத்தை சாந்தியடையச் செய்தனர். பொன்னாடை தரித்து, சங்கு சக்கரம், கத்தி, கேடயம், அம்பு வில், கதை, சூலம், வரதம், அபயம் அம்ருதகலசம், ரத்னபாத்திரம் போன்றவை கொண்ட தீருக்கரங்களுடன் தேவகணங்களால் சூழப்பெற்று சாந்தியைத்தருபவள்

**சபரீ துர்க்கா :**

பரமேஸ்வரன் வேடனாக ரூபம் தரிக்க நேர்ந்ததால் இறைவியும் வேடிச்சியாக உருமாறியவள் சபரீ துர்க்கா இடையில் மரவுரி தரித்து குந்துமணி மாலையணிந்து மயில் தோகையைக் காதில் அணிந்து இருகரங்களில் வில்லும் அம்பும் ஏந்தி அருள்பவள்.

**ஜ்வலத் துர்க்கா :**

ஸ்ரீ லலிதாபரமேஸ்வரி பண்டாசுரனோடு சண்டையிடும்போது சத்ருசேனை உள்ளே வராதிருக்க அக்கினி பிரகாரம் அமைத்து ஜ்வாலைமயமாய் இந்த துர்க்கை நின்று சக்தி சேனையைக் காத்தவள். அக்னி ஜ்வாலையால் சூழப்பட்டு சிம்மத்தின்மீது அமர்ந்து அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சூலம், முத்திரை இவற்றோடு கூடி ஜ்வலிப்பவள்.

**லவண துர்க்கா :**

லவணாசுரனை அழிக்கவேண்டி ஸ்ரீராமர் இந்தத் துர்க்கையைப் பிரார்த்தித்து, லட்சுமணனை அனுப்பினார் லட்சுமணன் வெற்றி கண்டதால் இத்திருநாமம். சங்குசக்கரம், கத்தி, சூலம் இவைகளை ஏந்தி முக்கண்ணோடு சூரியனாய் பிரகாசிப்பவள் சிவந்த சரீரமுள்ளவளாய் அரக்கர்களை அழித்தவள்.

**தீப துர்க்கா :**

அறியாமை இருளாகிய அந்தகாரத்தைப் போக்கி, ஞானத்தை அருள்பவள். செந்தாமரை நிறத்தவள் தீபச்சுடரில் ஜ்வலிப்பவள். சூலம், வில், அம்பு, சங்கு, சக்கரம், அபயம், வரதம் இவைகளைக் கரங்களில் கொண்டு சிம்மத்தின் மீது அமர்ந்து காப்பவள்.

**ஆஸீரி துர்க்கா :**

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, இம்மூன்று மோகங்களிலிருந்து விடுவித்து, மோட்சம் என்னும் முக்தியை அளிப்பவள் வெண்மை நிறத்தவள் சூலம், பாசம், கொண்டு தாமரையில் அமர்ந்து, பாம்பை பூணூலாகக் கொண்டு அதர்வண வேதத்தால் போற்றப்பட்டு மகிழ்ச்சியை அளிப்பவள்.

உன்னுசெவ்வாய் வாரங்களும்
உச்சிகாலை மாலைகளும்
ஓடிவரும் பக்தர்வெள்ளம்
உடல்மறந்தும் உயிர்மறந்தும்
தன்னையறி யாப்பெரிய
தவங்கிடந்து தோத்தரிக்க
தருணமழை யாயெழுந்து
சஞ்சலங்கள் தீர்த்திடுவாள்
கன்னலெனக் கனிகளெனக்
கயிரவவாய் வாக்களித்துக்
கர்ப்பூரச் சோதியுள்ளே

கண்காண நின்றிடுவாள்
இன்னதெய்வக் காட்சிகளை
எங்குசென்றும் காண்பாயோ
இனியதெல்லித் துர்க்கையுடன்
இசைந்தாடாய் அம்புலியே.

**கயிரவம்ச செவ்வாம்பல்:**

அலங்காரக் கோயில்மடம்
ஆயகலை அரங்குமடம்
அன்னமடம் அநாதைமடம்
அடியார்கள் கூடும்மடம்
கலங்காமல் வாழ்வதற்குக்
கன்னியரின் தொண்டுமடம்
கல்யாண மடங்களிவை
காட்சிதரும் நெடுங்கோயில்
நலங்காணும் ஆவணியில்
நண்ணுமுத்த ராடதினம்
நவரத்னத் தேரேறி
நானிலத்தைக் காத்திடுவாள்
குலங்காணும் தேவரெலாம்
கோபுரம்பார்த் ததிசயித்துக்
குலவு தெல்லித் துர்க்கையுடன்
குதித்தாடாய் அம்புலியே.

பரவுமுலைப் பால்கொடுத்துப்
பாடுவித்த ஞானமதி
பட்டருக்காய்த் தோடெறிந்த
பழமிர்த லிங்கமதி
அரவாக்கி விட்டுணுவை
ஐங்கரன்சீர் விளக்குமதி
அரிகேசன் காசியிலே
அணிவிளங்கச் செய்தமதி
குருமுகமாய்த் தமனுக்குக்
குளிர்பொற்கள் கொடுத்தமதி

குலமுனிவர் வியாசனுக்குக்
குணச்சுகரைத் தந்தசிவத்
திருமதியைப் புறக்கணித்துச்
செயல்மதிகெட் டலையாதே
தெல்லிநகர்த் துர்க்கையுடன்
சேர்ந்தாடாய் அம்புலியே.

(மதி : சந்திரரூபியாகிய பராசக்தி)

அரிகேசன் : இந்தத் தவச்சிறுவனுக்கு ஸ்ரீ வி சா லாட்சியம்மை (அன்னபூரணி) காசியிலே அன்னதாதா பிராணதாதா ஞானதாதா என்னும் பதவி கொடுத்தவள்

தமன் : தீபமேற்றித்தவமிருந்து, சிவன் உமையைப் பார்க்கக்கூடிய கண்களைக் கேட்டான் - காசிநாதனும் விசாலாட்சியும் கேட்டவரம் கொடுத்தனர். தமன் இருவரையும் பார்த்தான். ஒரு கண் பார்வை இழந்தது. விம்மிப்புலம்பினான். இறைவி அந்தக்கண்ணைப் பொற்கண்ணாகக் கொடுத்தான். அவனே குபேரன், அளகாபுக் கதிபன்.

## அம்மானைப் பருவம்

பொன்னான மேனி வெண்ணீறு பூக்க
புரிசடையலங்காரம்
பூவாசம் வீசப் பேசாத திருவாய்
புதுமுல்லை நகை யரும்ப
தென்னாட்டு மதுரை வந்தாடல் புரிந்த
சிவசோம சுந்தரேசன்
செஞ்சூல மேந்தும் கையால ணைத்துத்
தெறிக்குமம் மானை எண்ணி
நின்னாமம் போற்றி நீடாழி உலகில்
நீ வெற்றி என இயம்ப
நின்றாடும் சத்தி குன்றாடும் கந்த
நெடுவேலைக் கைப்பிடித்தான்
அன்னேயன் னேயென் றானந்தங் கொண்டான்
அம்மானை ஆடுகவே
அன்பான தெல்லித் துர்க்கா புரத்தாள்
அம்மானை ஆடுகவே.

ஆறோடு தும்பைப் பூ சூடுவானை
அழகான மயிலாப்பூர்
அறமோங்கு கச்சி யேகம்பம் சோலை
அணிமயி லாடுதுறை
பேறோங்கு சத்தி முத்தம்கே தாரம்
பேரோங்கு தலமிவற்றில்
பிரியாத பூசை பரிவாகப் பூண்ட
பெண்ணினல்லா ளுமையே
கூறோங்கு பாதி தருமேரு நாதன்
கொடைக்குத் தடாதகையே
கூரோங்கு ஞானம் சீரோங்கு நெஞ்சம்
கொண்டாடு தொண்டர்தமக்
காறாத செல்வம் பாரோங்கு வண்ணம்
அம்மானை ஆடுகவே
ஆனந்தத் தெல்லித் துர்க்கா புரத்தாள்
அம்மானை ஆடுகவே.

நடாளும் புகழ்ச்சி கூரான அறிவு
நற்கல்வி வீரம் வெற்றி
நல்லாயுள் துணிவு தானியம் செல்வம்
நயசுகம் இளமை எழில்
வாடாத பெருமை மகிழும் சந்தானம்
வளர் நல்ல குடிவாழ்வு
மனமார்ந்த நுகர்ச்சி என்னுமீர் எட்டும்
வழங்கும்ம கேஸ்வரியே
ஓடேந்தி எங்கும் காலேந்தி யாடும்
உன்மண வாளனுக்கெம்
முராடும் கொடுமை கூறாமற் கூறி
உழன்றிடு துயரமனம்
ஆடாதுன் அடிக்கீழ் ஆடித்தி ளைக்க
அம்மானை ஆடுகவே
அறமோங்கு தெல்லித் துர்க்கா புரத்தாள்
அம்மானை ஆடுகவே.

**வேறு**

கண்ணிமை யாத வானவர்கள்
கண்ணால் நின்னம் மனைகாண
கங்குல் பகலாய்க் காத்திருத்துன்
கடுகதி வேகக் கைவீச்சால்
எண்ணாக் கோடி அம்மனையை
எவரும் கண்டிலர் நாணுற்றார்
இரவியும் மதியும் மின்னொளியும்
இறுமாப் பொழிந்து திகைத்தார்கள்
தண்ணீர் சூடும் சடையழகன்
தாளிணைச் சதங்கையின் ஒலிகேளாத்
தனியிசை முழங்கி எழும்வண்ணம்
சப்தஸ் வரங்கள் உதிக்கின்ற
திண்ணார் கைவளை கலகலக்கும்
தேனம் மானை ஆடுகவே
தெல்லித் துர்க்காம் பிகையம்மா
திருவம் மானை ஆடுகவே

பூதம் பொறிபுலன் இந்திரியம்
பொருந்திய கன்ம விஷயங்கள்
பூத்திடு கரணம் அறிவென்று
புகன்றிடு மிவைகள் முப்பானும்
ஓதும் நாடி வாயு சயம்
உணரும் கோசம் முப்பானும்
உயரா தாரம் மண்டலங்கள்
உறுமலம் தோஷம் ஏடணைகள்
மோதும் குணங்கள் இராகங்கள்
முயல்வினை அவஸ்தை எனமேவும்
முப்பத் தாறும் தத்துவமாய்
முற்றிப் பழுத்த முழுப்பொருளை
ஏதும் தெரியோம் தெளிவுபெற
இருந்தம் மானை ஆடுகவே
எங்கள் தெல்லித் துர்க்கையம்மா
இசையம் மானை ஆடுகவே.

மூலாதார நான்கு தள
முளரிப் பிரணவ குண்டலியாய்
முகிழ்ந்து வளர்ந்து சகஸ்ரார
முகட்டு விளக்காய் இருப்பவளே
நாலா ரணமும் அவைபுகலும்
நான்கே ழாகம நெறிகளுமாய்
நண்ணும் தவமார் ஞானியர்கள்
நயந்து பிடிக்கும் பெருந்துணையே
கோலா கலமாய் அண்டங்கள்
குலங்கிப் புலம்ப ஆணவத்தின்
கொடுங்கோ லாட்சி புரியசுரர்
குலத்தை யழித்து வாவென்று
வேலீந் தவளே நின்கருணை
விருந்தம் மானை ஆடுகவே
வீரத் தெல்லித் துர்க்கையம்மா
வீட்டம் மானை ஆடுகவே.

ஆய கலையறு பதினான்கும்
அம்மனை யாகக் கைநிரப்பி
அட்ட திசையார் கடமைகளும்
அரியயன் உருத்திரன் செயற்பாடும்
ஏய பூதம் இயங்குவதும்
இருபத் தேழு நாள்நிலையும்
இதிகா சங்கள் புராணங்கள்
இயல்பும் தரும வரம்புகளும்
தூய கோளும் வினைநுகர்வும்
தொடுத்த சித்தாந் தத்தெளிவும்
சொன்ன வேதத் துச்சிகளும்
தொடரும் நாடக மெனஉணர்த்தும்
மாயன் சோதரி நம்வாழ்வு
மலரம் மானை ஆடுகவே.
மந்திரத் தெல்லித் துர்க்கையம்மா
மகிழம் மானை ஆடுகவே.

## வேறு

இருளான சிறைக்கூடத்தில்
ஏங்குதே வகிமா தேவி
இன்பமாய்ப் பெற்றெடுக்க
இசைமிகு யசோதை பங்கில்
இரவிலே வந்து சேர்ந்த
இடைக்குலப் பால னாகி
எல்லார்க்கும் பிள்ளையாகி
எண்ணிலா அற்புதங்கள்
வருசிறார் தம்மோடாற்றி
மங்கையர் குரவையாட
வாயில்வேய்ங் குழல் கொண்டூதி
மாநிலம் மயக்கவைத்த
அரியுங்கண் டதிசயித்தான்
அம்மானை யாடு வீரே
அருள்தெல்லித் துர்க்கையம்மா
அம்மானை ஆடுவீரே.

சீரொன்று காரைக்காலில்
சிவநெறிப் புதல்வி யாகித்
திகழ்புனி தவதியம்மை
செகமுறு வாழ்வு நீத்து
ஊரொன்று தசைவிலக்கி
உடலொன்று மென்புக்கூடாய்
உருண்டுருண் டாலங் காட்டின்
உயிரொன்று சிவனை, ஜென்மம்
தீரென்று பதிகம்பாடி
சிரசினால் வருகைகண்டு
திருவிழ் நயந்து தேவ
தேவனே இத்திறத்தாள்
ஆரென்று கேட்டஅன்னை
அம்மானை ஆடுவீரே
அருள்தெல்லித் துர்க்கையம்மா
அம்மானை ஆடுவீரே.

துன்பங்கள் தொடரு மாயா
சுழலிடைத் துரும்பு போலச்
சொல்லொணாப் பாவியானேன்
துவாதசாந் தத்துமேலாம்
இன்பங்கள் அறியுமாற்றல்
எனக்கில்லை எருமை ஏறும்
எமராச தூதர்வந்தால்
ஏங்குவேன் தவப்பேறில்லேன்
வன்பழிக் கயவனென்னை
வழிகாட்டி நினதுபாத
மலர்ப்பணித் தொண்டரோடு
வாழ்ந்திடும் வரம்தாராயோ
அன்புயர் தெல்லியூராள்
அம்மானை ஆடுவீரே
அடைக்கலம் துர்க்கையம்மா
அம்மானை ஆடுவீரே.

# தத்துவங்கள் தொண்ணூற்றாறு

## 1 ஆம் தத்துவம்

பூதம் : பிருதி அப்பு தேயு வாயு ஆகாசம் 5
பொறி ( ஞானேந்திரியம் ) மெய், வாய், கண், மூக்கு, செவி 5
புலன் ( தன் மாத்திரை ) சத்தம், பரிசம், ரூபம், ரசம் கந்தம் 5
கன்மேந்திரியம் : வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் 5
கன்மவிஷயம் : வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் 5
கரணம் : மனம், புத்திசித்தம் - அகங்காரம் 4
அறிவு : 1

30

## 2 ஆம் தத்துவம்

நாடி : இடைகலை, பிங்கலை, கழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு 10
வாயு : பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் 10
சயம் : அமர்வா, பகிர்வா, சலவா, மலவா, சுக்கிலா. 5
கோசம்: அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம். 5

30

**3 ஆம் தத்துவம்**

| | | |
|---|---|---|
| ஆதாரம் : | மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை | 6 |
| மண்டலம் ; | அக்கினி, ஆதித்த, சந்திர | 3 |
| மலம் : | ஆணவம், கன்மம், மாயை | 3 |
| தோஷம் : | வாதம், பித்தம், சிலேத்துமம், | 3 |
| ஏடணை : | தனேஷணை, தாரேஷணை, புத்திரேஷணை | 3 |
| குணம் : | இராசசம், தாமதம், சாத்துவிகம் | 3 |
| இராகம் : | காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம், இடும்பை, அகங்காரம் | 8 |
| வினை : | நல்வினை, தீவினை | 2 |
| அவஸ்தை : | சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் | 5 |
| | | 36 |

# புது நீராட்டுப் பருவம்

தோற்றமொ டந்தம் நடுவாகித்
துதிக்கு மவரவர் நிலைக்கேற்ப
மாற்றம் பற்பல வாயிருப்பாய்
மாற்றங் கடந்த மனோன்மணியே
ஆற்றில் மிதந்த வலம்புரியே
அறமுயர் தெல்லிப் பழையவளே
போற்றும் துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

சங்கம் வளர்ந்த மதுரையிலே
தமிழ்ப்பொற் றாமரை ஒருபொய்கை
செங்கை வேலோன் வந்துதிக்க
சிறப்பு மிகுசர வணப்பொய்கை
தங்கும் தெல்லிப் பழையினிலே
தந்தாய் நின்னருள் மலர்ப்பொய்கை
பொங்கும் துர்க்கா புஷ்கரணிப்
புதுநீர் ஆடி அருளுகவே.

கல்லார் நெஞ்சில் நில்லாத
கலைநா யகியே எழுபிறப்பும்
செல்லா தழித்துத் திருவடிகள்
சென்னிக் கணியத் தருபவளே
நில்லா நெஞ்சம் நிலைநிறுத்தி
நினையறி யும்பே றருள்துர்க்கா
பொல்லாப் பகற்றும் புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

வழிபடு மடியான் கிடந்தரற்ற
மருந்தளித் துறுநோய் தீர்த்தவளே
விழிபடு குருடாய் வேண்டியவன்
மிகுநுண் பார்வை பெறவைத்தாய்

குழிபடு வினைதீர்த் தருளுலகம்
கொடுக்கத் தெல்லிப் பழையமர்ந்தாய்
பொழினிறை துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

தேவா ரத்தைப் பாடுதற்குச்
சிவனார் தருதா ளங்கட்குப்
பாவார் ஓசை கொடுத்தின்பம்
பயில்கோ லக்கா வமர்ந்தவளே
நாவால் நாயேன் நினைப்பாடும்
நலந்தரு பவளே தெல்லிநகர்
பூவார் துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

ஆரண மகளே, அகத்தடங்கா
தையனை முத்தம் கொடுத்தவ்வூர்
சீரணி சத்தி முத்தமெனத்
திகழ்வுற, பரம சிவன்மகிமை
தாரணி யறிந்திடச் செய்தவளே
தமிழ்வளர், அறக்கொடைத் தெல்லிநகர்
பூரணி, துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

வருந்திடு மலடு தீர்த்திடுவாய்
மனங்குளிர் இல்லற வாழ்வருள்வாய்
திருந்திய அடியவர் பிறரிடத்தில்
சென்றிரக் காத வரந்தந்தாய்
மருந்துடன் தந்திர மந்திரமாய்
வளர்ப்பாய் தெல்லி விழைகழனி
பொருந்திய துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

எண்ணிடு மெண்ணம் பலகோடி
இவற்றால் இலவுக் கிளிபோல
மண்ணிற் பிறந்த நோக்கிழந்து
மறலிக் கயிற்றில் உழலாமல்

திண்ணிய மனத்தால் ஐந்தடக்கும்
சீலமும் தருவாய் சிவதெல்லிப்
புண்ணிய துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

அற்புதக் கங்கை யமுனை திரு
வருள்மிகு நருமதை காவேரி
கற்பக சரஸ்வதி குமரி சிவன்
கண்ணருள் கோதா வரி நதிகள்
சொற்படி நல்லூற் றாய்க்கலந்து
தோய்வார் துயர்தீர்த் திடும்தெல்லிப்
பொற்புயர் துர்க்கா புஷ்கரணிப்
புதுநீ ராடி யருளுகவே.

அன்னே நீபுது நீராடும்
அருளாம் தீர்த்தம் அருந்துமவர்
பின்னாற் றொடரும் வினையில்லா
பிணிமிடி கவலை ஒழித்திடுவார்
மின்னேர் காயம் மனம் வாக்கு
மிளிரும் ஞான சுகம்பெறுவார்
பொன்னே துர்க்கா புஷ்கரணிப்
புது நீ ராடி யருளுகவே.

## பொன்னூஞ்சற் பருவம்

நவசத்தி எழுசத்தி பஞ்சசத்தி
நாற்சத்தி முச்சத்தி ஏகசத்தி
எவருக்கும் தெரியாத சோதிசத்தி
எனநின்று வருமடிய வர்க்கிரங்கிப்
புவனத்தில் பலகோடி தலமமர்ந்தாய்
புனித உழு கொடையம்மன் என்று நின்றாய்
சிவசக்தி தெல்லிநகர்த் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே

பொங்கார வேலையெனப் பிறவிபற்றும்
பொல்லாத இருவினையின் தளையறுத்து
மங்காத சீரகத்தை வழுவிலாத
மாணடியர் பெறக்கருணை வழங்குகின்றாய்
சங்கீத வாணிசெழுங் கமலமங்கை
தங்குமிரு விழிகளெனக் கொண்டமர்ந்தாய்
சிங்காரத் தெல்லிநகர்த் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே

மலங்கேடு தந்தெம்மை யலைத்திடாமல்
மதிபூத்த வதனமலர் நகையரும்ப
கலங்காத வழிகாட்டிக் கனிந்த இன்பக்
கண்காட்டிக் கலைபாயும் பாதங்காட்டி
இலம்பாடு காணாத வாழ்வுகாட்டி
இரவுபக லில்லாத இடமுங்காட்டி
சிலம்பாட வருந்தெல்லித் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே.

புரந்தரனும் திருமாலும் அயனும் அங்கி
பொங்குமுருத் திரனுமெண் மூர்த்தி யோரும்
வரந்திரண்ட மகிஷனுயிர் வதைக்கவொண்ணா
மதிகலங்கி யனைவோரும் வந்து நின்னை

இரந்துகரங் கூப்பிடவல் வரியிலேறி
எவ்வுலகும் நடுநடுங்க வெற்றி பூண்டாய்
சிரந்தழுவு சிவத்தெல்லித் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே

மூலமெனும் காசிவிநா யகமகன்நின்
முகம் பார்த்துக் குடதிசையை நோக்கி நிற்க
கோலஜம தக்கினிதோய் நகுல தீர்த்தக்
கொடைத்தம்பலேஸ்வரனார் வலக்கண்நோக்க
வேலழகன் மாவைநகர்க் குமரன்வந்து
வெற்றிவேல் விடைவாங்கும் பெருமைமிக்க
சீலசிவத் தமிழ்ச்செல்வித் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே

பாதார விந்தமணிச் சிலம்பிசைக்குப்
பரந் தெழுந்து மலரெழுதேன் நாடிவந்த
கீதார அறுபதங்கள் செயல் மறந்து
கிளையுடனே அடிக்கமலம் சூழ்ந்து மொய்க்க
வேதாவும் நாரணனும் தேடிக்காணா
விடையவன்நின் கழல்காணா தலமந்தேங்கும்
சீதேவி வாழ்தெல்லித் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே

நின்முகத்தை நிறைமதியப் புத்தேள்கண்டு
நீண்டிடுசெவ் வரிவிழியைக் கயல்கள் கண்டு
பொன்மலரும் வளைக்கையைக் காந்தள் கண்டு
பொலிமேனி யழகைச்சாம் புநதம் கண்டு
மென்மருங்குல் தனைவான மின்னல் கண்டு
வேறொன்றும் காணாமல் நாணும் வண்ணச்
சின்மயமே னித்தெல்லித் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே.

நின்னடியார் வாழையடி வாழையாக
நீடூழி திருத்தொண்டு நிகழ்த்தச் சைவ
நன்னெறிகள் வழாதுலகம் சிறக்க வேந்தர்
நவையறுசெங் கோல்செழிக்க வாய்மை நீதி

துன்னியசெந் தமிழ்இதிகா சம்புராணம்
தொடர்சால்பு நிலைநிற்க அடியோம்நின்தாள்
சென்னிவைக்க அருள்பொழியும் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே.

பத்தரினம் சித்தரினம் பண்புபழுத்த
பாவையரின் கூட்டங்கள் பாடியாட
தத்துவநற் பூசுரர்பூ சிக்கச்செல்வி
தங்கம்மா முதலானோர் தொண்டுசெய்ய
உத்தமஆ வணிஉத்த ராடம்தேரில்
உவந்தேறித் திருவோணத் தீர்த்தம்நல்கிச்
சித்திதரும் தெல்லியூர்த் துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே.

எப்பவமும் நினைமறவா இதயம்வேண்டும்
எப்போதும் நினைப்பாடும் நிலைமை வேண்டும்
முப்பொழுதும் சிவமூல நாமம் சொல்லி
முழுவெண்ணீ றக்கைமணி புனைய வேண்டும்
ஒப்பரிய தொண்டரினம் கூடவேண்டும்
உளச்சோதி கண்டுசும்மா இருக்கவேண்டும்
செப்புமிவை வரந்தந்து துர்க்கையம்மா
திருஞானப் பொன்னூஞ்சல் ஆடியருளே.

அனுபந்தம்

## 1974 திருவருட்கவிமாலை — பிள்ளைத்தமிழ்

## காப்புப் பருவம்

வல்ல நாயகி மங்கள நாதனே
வார ணானன மூஷிக வாகனா
மன்னு மேருவில் மந்திர மாமறை
வந்து சூடிய எந்தைக ணேசனே
நல்ல காவிரி நானில மீதுற
நல்கு காகமெ னப்பறந் தோடிய
நாய காசிவ னாடிய தேர்விழ
நண்ணு மச்சிறுத் தாய்விக்கி னேஸ்வரா
தில்லை யாரணி தேவ மனோஹரி
சித்தி ரித்துக்கை சேர்த்து வழங்கிய
செல்வ னேதுயர் தீர்க்கும் பராபரா
சித்த பத்திமைச் சீரடி யார்திகழ்
தெல்வி யூரினிற் சேர்ந்தவு முகுடைத்
தேவர் சூழ்பதித் தேவிதுர்க் காம்பிகைத்
தெள்ளு மானந்தப் பிள்ளைத்த மிழ்சொலச்
சேவ டித்துணை செய்தெமைக் காக்கவே.

## செங்கீரைப் பருவம்

பேராரு முலகங்கள் பலகோடி யாக்கியவை
 பேணியுண வூட்டி யென்றும்
பிரியாம லருகுதிரு விளையாடல் செய்தமரர்
 பேணுபத முதவு சிவையே
நேரான வீரமுறு நெஞ்சிலே யஞ்சுகம்
 நிகரமொழி பேசு முமையே
நித்திலப் புன்னகை நிலாவினா லன்பர்தம்
 நீங்காத குறைக ளெல்லாம்

தாராள மாயரன் தண்செவி புகன்றுவரந்
தரவாங்கி யீயு முமையே
தவயோக முனிவருணர் சிவஞான வீடெலாம்
தவழ்ந்துநட மாடு மயிலே
சீராரும் தெல்லியூர் திகழுமுழு குடைஜனனி
செங்கீரை யாடி யருளே
திக்கற்ற வர்க்கருளும் துர்க்கையம் மாவினிய
செங்கீரை யாடி யருளே.

## தாலப் பருவம்

எங்கும் பரவி இறைவனுடன்
இயலைந் தொழில்க ளினிதாற்றி
இகமும் பரமும் இலங்குசுக
மீந்து வினைக ளீடழித்துப்
பொங்கும் வேதா கமநெறிகள்
பொலியப் பூசை புரிந்தன்பிற்
புகுந்து கழலைப் புனையடியார்
புந்திக் கருளும் பூரணியே
சங்கம் வளர்த்த தடாதகையே
தத்வா தீதத் தனிப்பொருளே
சாத்வீ கத்தில் தளிர்த்தெழுந்த
சக்திக் கனியே சால்புநலம்
தங்கும் தெய்வத் தெல்லிநகர்த்
தவமே தாலோ தாலேலோ
தளரா வாழ்வைத் தரும்துர்க்கைத்
தாயே தாலோ தாலேலோ

திகழும் கலையாம் பருப்பினொடு
செழித்த சுருதித் தீங்கரும்பும்
செறிதத் துவமாம் செழுந்தேனும்
திரள்முக் குணத்துத் தீஞ்சுவையும்
அகநற் பசுவின் அன்பென்னும்
அமுதப் பாலும் அளைந்தெடுத்த
அருமைச் சுவையே அறிவுடையார்
அருட்கண் ணுகரு மானந்தச்

சுகமே சுகத்தி லுறுவிளைவே
தோன்றும் காட்சித் தொடர்முடிவில்
துலங்கும் சிகரச் சுடரொளியே
சுரக்கும் ஞானச் சுனையேவான்
மகிழும் தருவே பவப்பிணிக்கு
மருந்தே தாலோ தாலேலோ
வளருந் தெல்லிப் பதித்துர்க்கை
மணியே தாலோ தாலேலோ.

## சப்பாணிப் பருவம்

அரிமாலு மறியாத நிறைசோதி யேகற்ற
அறிவா லறிந்து தெளியும்
அமுதமே சிவாயநம வட்சரத் திருநடண
அம்பலத் தைய னுடனே
எரியாகி வளியாகிப் புனலாகி மண்விண்ணாய்
எல்லா மியக்கி மொழியும்
எண்ணெழுத் தானகோ ணங்களி லமர்ந்தாடு
மிறைவியே இரவி மதியைச்
சரியாகப் பணிபுரிய விதிகாட்டு மரசியே
தழுவுசன் மார்க்க வுண்மை
சாற்றுமெண் ணெண்கலைக ளேற்றவகை பொலிவுதரச்
சற்றுமொரு கணநே ரமும்
தரியாது நடமாடு மதிகாரி யேமெல்லச்
சப்பாணி கொட்டி யருளே
தமியேன் மனங்குளிரத் தெல்லியூர்த் துர்க்கையே
சப்பாணி கொட்டி யருளே.

## முத்தப் பருவம்

கையாற் பிசைந்து கண்துளும்பக்
கதறி நெடுங்கோ புரம்பார்த்த
காதற் குழந்தைக் காயிரங்கிக்

கனமார் முலைப்பால் கறந்தளித்த
மையார் கண்ணி மனநிலைத்து
வழுத்தும் பன்னாள் வளர்தவத்தில்
மன்னும் பார்த்தன் வரங்கொள்ள
மணவற் கின்னருள் வாய்மலரும்
கையார் வளையற் காரணியே
காய மழிந்தும் கருத்தழியாக்
கதிகாண் நாவுக் கரசற்குக்
கைலை காட்டக் கணவனுடன்
ஐயா றமர்ந்த மடப்பிடியே
அருள்வாய் முத்தந் தருகவே
அழகார் தெல்லி நகர்த்துர்க்கை
யம்மா முத்தம் தருகவே.

## வாரானைப் பருவம்

நாவி லிருந்து நடமாடும்
நாதப் பெருக்கே, சகஸ்ரார
நடுநின் றொளிரும் நாதாந்த
ஞானப் பொருப்பே வருகநமைக்
காவ லிருந்து நன்னெறியிற்
காட்டிக் கரும்புக் கட்டிதரும்
கருணா கரியே வருகதமிழ்க்
கவிதை நயக்கும் கந்தப்பன்
மேவ வொருங்கு விழைந்தெடுத்த
விமலி வருக சிவசமய
விளக்கே வருக மெய்த்தொண்டர்
விதியைப் புதுக்கி மேலின்பத்
தாவி யுறங்க அணைக்குங்கை
அன்பே வருக அறம்பொலிய
அமர்ந்த தெல்லி நகர்த்துர்க்கை
யாத்தாள் வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

வேதியர்கள் முனிவர்கள் வானவர்ம திக்கமழ
விடையவன் சென்னிபெற்றாய்
விளங்குதூ ணாகுதுணை யாற்றினாய் தமிழிலே
விருப்புடைய மூர்த்தியானாய்
ஓதியுணர் வரியசிவ சத்தியின் பத்தருக்
குதவுபவ னீயாதலால்
உனையழைக் கின்றனம் சதுரமறை முறைமதுரை
ஓங்கமுடி கொண்டசத்தி
மோதிவரு மவுணர்படை முடுகிப் பதைத்தழிய
முட்டித் தகர்த்தசத்தி
முச்சத்தி யாகிய பராசத்தி ஈசனின்
முன்னின் றெதிர்த்தாடிய
ஆதிசிவ சத்தியுட னாதரவு கொண்டாட
அம்புலீ யாடவாவே
அற்புதத் தெல்லியூர்த் துர்க்கையம் பிகையுடன்
அம்புலீ யாடவாவே.

## சிறுபறைப் பருவம்

(இப் பாடல் பூர்வ வரலாற்றைக் குறிப்பிடுகிறது)

உத்தமக் கதிர்காமப் பக்தரெனும் சுப்பையர்
ஓங்குமுந் நூறாண்டுமுன்
உயர்காசிப் பதியிருந் துருவதிரு முகக்கெண்டி,
உயர்சொப்ப னேஸ்வரிபதச்
சத்திதுர்க் காதேவி யந்திரங் கொண்டுநலந்
தருவேம்பி னிழலுழுகுடைத்
தண்பதியிற் றாபித்துப் பூசித்து வருநாளில்
சாற்றுதல யாத்திரைசெலும்
முத்திதரும் காஞ்சிபுர வுத்தமவந் தணனொருவன்
முந்துபசி தீர்ந்தித்தலம்
மொட்டறா மலர்கொண்டு நிட்டையும் பூசையும்
முட்டின்றி நின்றியற்ற
சித்திதரும் நின்கோயில் பொங்கியதென் றுலகறியச்
சிறுபறை முழக்கியருளே
ஜெகநாத னுக்கிளைய தெல்லியூர்த் துர்க்கையே
சிறுபறை முழக்கியருளே.

## சிற்றிற் பருவம்

பெருமான் சுடர்வெண் பிறையாளன்
பிரியா தணைந்து களபமணம்
பெருகும் பதுமத் திருமேனி
பிறழப் புழுதி படியார்தோ
வருவார் வினையை வகுத்தினிய
வரங்கள் சுரக்கும் வண்கலசம்
மண்ணிற் பட்டால் நிலைமாறி
மாண்பு நலத்திற் குறையாதோ
உருவார் மென்பூத் திருவடிகள்
உருட்டும் சிறுமண் பரல்முட்டி
உதிரம் குமிற உள்சிவந்து
ஊன மடைந்து வருந்தாவோ
திருநீ றணியத் தருபவளே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெல்லிப் பழையூர் ஸ்ரீதுர்க்கைத்
திருவே சிற்றில் சிதையேலே.

## சிறுதேர்ப் பருவம்

இவராகி யவராகி ஏழ்செனனத் தாயினத்
  தெண்ணிலா வுயிர்க் கொத்தினை
இட்டுருட் டும்பரற் கேற்றவல் லமையாகி
  இருக்கும் மகா சத்தியே
நவகோளும் பிரமனும் நமனுமுன் னடியார்க்கு
  நலமா யுருண்டு வேண்டும்
ஞானசுக மீயப் பணித்திடும் முதல்வியே
  நான்கு மார்க்கத் தலைவியே
அவமான கொடுநோய்கள் அடுபேய்கள் மிடிபகைவர்
  அக்கிரமம் செய்திடாமல்
அரியேறி யகிலாண்ட கோடானு கோடிகளை
  அசையவுருட் டுங் காந்தமே
சிவபோத முலகெலாம் சென்றுருண் டிடமறைச்
  சிறுதே ருருட்டி யருளே
செந்தமிழ்த் தெல்லியூர் திகழ்துர்க்கை யம்மையே
  சிறுதே ருருட்டி யருளே.

தமிழ் ஆய்வு நூலகம் ★
07-01-2003

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,